MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY,
THIRUVANMIYUR, MADRAS-41.
113

உ

வேண்டுகோள்.

அன்பான மிக்க ஐய!

வணக்கம். நல்லேம். நலமே அறிய அவாவுவேம். நம் தாய்மொழியாகிய தமிழ்மொழிப் பண்புகளையும், தமிழ் மக்கள் நலங்களையும் பேணி, நம்மவர் தமிழ்நாடு பண்டை உயர்நிலை பெற்றுச்சிறக்கச்செய்தற் கேற்றகருவி, நன்முறையில் நடைபெறும் மாதச்சஞ்சிகைகளும் தினசரிப் பத்திரிகைகளுமே என்பது தாங்கள் நன்கறிவீர்கள். தமிழ் நாட்டின் நடுநகரமாகிய இத்திரிசிர புரத்திலிருந்து அத்தகையதோர் மாதவெளியீடு பிறப்பிக்கவென்று பலயாண்டு முயன்று இப்போது "தமிழர்" என்னும் பெயரால் ஒருமுறை குரோதன, சித்திரை மாதம் முதல் தொடங்கி 9 இதழ்கள் வெளியிட்டு வந்துள்ளோம்.

நந்தமிழ்நாட்டில் தமிழ்மக்கள் பலவேறு வகைகளிற் பிளவுபட்டு நிலை குலைந்து தொழின்முறைகளும் சீர்கெட்டு நிற்கும் நிலைமையை மாற்றி, எல்லாச்சமயத்தாரும், எல்லா வகுப்பாரும், பலவேறு இயக்கத்தாரும் போற்றுதற்குரிய பலவகை வளர்ச்சித்துறைகளில் ஒற்றுமையோடு கூடி மேம்படுதற்கு ஏற்ற பல பொருளுரைகளும், தொழில் முறை விளக்கங்களும், வர்த்தக விளம்பரங்களும் பல அறிஞர்களைக்கொண்டு எழுதுவித்தும், நாணயம் மிகுந்த பல வியாபாரிகளைக் கொண்டு விளம்பரம் செய்வித்தும், நன்முறையில் நடைபெறும் பல ஆங்கில ஜர்னல்களைப்போல இச்சஞ்சிகையையும் நடத்தத்துணிந்து வெளிப்பட்டுள்ளோம். இவ்வுண்மை இத்துடன் தங்களுக்கனுப்பியுள்ள "தமிழர்" மாத வெளியீட்டை ஒருமுறை அன்புடன் நோக்குதலால் நன்கு விளங்கும்.

இம்முயற்சி நீள நிலைத்து நடைபெறுதற்கு இதற்கென ஒரு அச்சுநிலையம் இன்றியமையாதது. அதற்குக்குறைந்தது ரூ. 10,000 வேண்டும். தமக்கென வாழாத்தண்டமிழ்ப் பெருமக்கள் வழிவந்த தாங்கள், இந்நன் முயற்சியில் எம்மை ஊக்கி இத் "தமிழர்" வெளியீடு நிலைத்து நடைபெறச் செய்தற்குத் தங்கள் கையொப்பமும் நன்கொடையுந் தந்து, "தமிழர்"க் கோர் புரவலராகவும் அமர்வீர்களென்று தங்கள் மேலான அன்பை வேண்டுகின்றோம்.

25, மலைவாசல்,
தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிராப்பள்ளி.

இங்ஙனம்,
தங்களன்பிற்குரிய,
உ. க. பஞ்சரத்தினம்,
அமைச்சன்.

புரவலர் காணிக்கை ரூ.	100.	ஆயுட்காலசந்தா ரூ.	25.
வெளிநாடுகளுக்கு ரூ.	3.	உயர்ந்த பதிப்பு	2/8.
சாதாரணபதிப்பு ரூ.	2.	தனி சஞ்சிகை அணா	4.

14

உ

"தமிழர்"

பத்திரிகைகள் கிடைக்கும் இடங்கள்:-

1. இருப்புப் பாதை இரயில்வே ஸ்டேஷனிலுள்ள எல்லா ஹிக்கின் பாதம் புத்தகசாலைகள்.
2. சென்னை :—சோல்டன் கம்பேனி, 193, திருவல்லிக்கேணி ஹை ரோட்.
3. சென்னை நியூஸ் ஏஜென்சி, எஸ்பிளனேட், ஹை கோர்ட்டுக்குச் சமீபம்.
4. தென்னிந்திய நலவுரிமைக் கூட்டுறவு சங்கம், கோயமுத்தூர்
5. திரு T. M சிவஞானம் பிள்ளையவர்கள், ரைட்டர் (எழுத்தாளர்) மகாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
6. திரு T. S. கணபதி பிள்ளையவர்கள், காரியதரிசி, தியாகராய நிலையம், சேலம்.
7. ,, தீட்சதர் புத்தகசாலை, கும்பகோணம்.
8. ,, தேவராஜுலு நாயுடுகாரு. போஸ்டாபீசு. தஞ்சாவூர்.
9. ,, N. சிவகுருநாத பிள்ளையவர்கள், சைவப் பிரகாசம் அச்சுக்கூடம், தூத்துக்குடி.
10. ,, S. கோபால், இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரம், 178, செலிஜி ரோட்டு, சிங்கப்பூர்.
11. ,, பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பேனி, 3, 5, ராட்ஜர் மார்க்கட்டு தெரு, கோலாலம்பூர்.
12. ஷை............ஐபோ
13. ஷை............சிங்கப்பூர்.
14. ஷை............பிணங்கு.

ஷை கம்பேனியின் கீழ் குறிப்பிட்ட இரயில்வே புத்தக சாலைகளிலும் கிடைக்கும்:—

15. மலாக்கா, செராம்பன், கிலாங்கு, தபாரோட்டு டைப்பிங்கு, பாரிட்பந்தர், அலர்ஸ்டார் கெடா.

16. பிரிட்டிஸ் அமெரிக்கன் நியூஸ்கம்பெனி, புத்தக வியாபாரிகள் 6, பாட்டரிதெரு, சிங்கப்பூர் இன்னும் பிற இடங்களிலும் கிடைக்கும்.

மற்ற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டாக இருக்கப் பிரியப்படும் அன்பர்கள், அமைச்சர் "தமிழர் நிலையம்" 25. மலைவாசல், தெப்பக்குளம், (போஸ்டு,) திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதவும்.

உ

எமது முறையீடு.

அன்புள்ள ஐயன்மீர் !

தமிழ் நாட்டின் முன்னேற்றத்தையே மனதில் கொண்டு எமக்கு நேரிட்ட பல வேறு இன்னல்களையும் இறைவன் திருவருளால் பொருட்படுத்தாது, அன்பர்களின் உதவியால் ஒருவாறு இதுகாறும் 'தமிழர்' (9) ஒன்பது இதழ்களையும் வெளியிட்டு வந்திருக்கிறோம். யாம் எண்ணிய எண்ணமெல்லாம் ஒருங்கே முற்றுப்பெறவேண்டின் அன்பர்கள் பலருடைய கூட்டுறவு மிக மிக வேண்டற்பாலது என்பது திண்ணம். 'தமிழர்" சஞ்சிகையில் எவ்வளவோ குறைகள் உள என்பதை நாம் முற்றும் அறிவோம். எனினும், எமது நோக்கத்தையும், பணியையும் மேற்கொண்டு நடைபெறும் தமிழ் பத்திரிகைகள் எவ்வளவு நமது தண்தமிழ் நாட்டில் உலாவி வருகின்றன என்பதை தமிழ் அறிஞர்கள் நன்கு அறிவார்கள். எமக்கு இதுகாறும் நேர்ந்த பல வேறு இன்னல்களை வெளியிடின் அது ஒரு புத்தகமாக முடியும் எனக் கருதியும், அவைகளை அன்பர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களுடைய அருமையான காலத்தை வீணாக்கலாகாது என்கிற எண்ணத்துடன் வெளியிட்டோமில்லை. எம்முடைய சஞ்சிகையானது தலைசிறந்து விளங்க வேண்டுமெனின் இதற்கு ஒரு தனிப்பட்ட அச்சுக்கூடம் வேண்டும். அச்சுக்கூடமெனின் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பிடிக்கும் என்பது அன்பர்கள் அறிந்ததே. சஞ்சிகை இலவசமாக வரும் வரைக்கும் பெற்றுக்கொண்டிருந்து வி. பி. யில் வந்தவுடன் திருப்பிய அன்பர்கள் பல நூறு பேர் ஆவார்கள். இவர்களால் எமக்கு நேர்ந்த வீணான பொருட்செலவு பல நூறு ரூபாய்கள் ஆகும். இது போன்ற பலவேறு சோதனைகள் இடைக்கிடையே எம்முடைய முயற்சியை சோதிக்க நேர்ந்தன. இது வரைக்கும் யாம் 'தமிழர்' பத்திரிக்கைக்காகச் செலவழித்த பொருள் இருபது நூறு ரூபாய்க்கு மேல் ஆகும். நாம் கைவரப் பெற்ற பொருள் எழு நூறு ரூபாய்க்குள் தானிருக்கும். ஆகவே, எம்முடைய முயற்சி மேலும் மேலும் ஓங்கி வளர வேண்டுமெனின், அன்பர்கள் பலர் நமது 'தமிழர்' சஞ்சிகையை ஆதரிப்பார்கள் எனின், அடுத்த ஆண்டு முடிவதற்குள் தமிழ் உலக முன்னேற்றத்

திற்கு ஆற்ற எண்ணியுள்ள அரும்பணியை பல வேறு துறைகளிலும் ஒருவிதமான சோர்வும் இல்லாமல் சிறிது துணிந்து நடாத்த எண்ணியுள்ளோம். பல அன்பர்கள் வேண்டுகோளுக் கிணங்க அடுத்த இதழில் செய்திக்கொத்தும் இன்னும் பல வேறு அருமையான கட்டுரைகளும் வெளிவரும்.

தமிழரிலுள்ள தமிழ் நடை ஓரேநடையல்ல, பல வேறுநடைகள் பலவேறு தமிழ் அறிஞர்களால் பல வேறு வகைப்பட்ட துறையில் உள்ளவர்களுக்கெல்லாம் பயன்படக்கூடியன இன்னும் பலவேறு சிலகுறிப்புகளும் அடுத்த இதழில் வெளிவரும். யாம் தமிழ் நாட்டிலே ஒரு தமிழ் சர்வகலாசாலை நிறுவக்கூடிய முயற்சியிலேயும், இன்னும் பல வேறு பொதுப்பணிகளில் ஈடுபட்டு, சென்னைக்கும், பிறவிடங்களுக்கும் சில வாரங்கள் செல்ல வேண்டி நேர்ந்தமையாலும், இன்னும் பல வேறு இடர்ப்பாடுகளாலும் "தமிழர்" மார்கழி இதழ் குறித்தகாலத்தில் வெளிவர சிறிது தாமதப்பட்டது. அன்பர்கள் எல்லோரும் சிறிது எம்மேல் கருணைகூர்ந்து இதுவரைக்கும் "தமிழர்" இதழில் வந்த பொருள்களின் அருமையைப் பாராட்டுவார்களா யிருப்பார்களாயின் எம்முடைய முயற்சி சீர் பெற்று இது போன்றும், இன்னும் சீரிய கட்டுரைகளை தமிழ் நாட்டிற்கு உதவி உழைக்கவேண்டும் என்னும் எண்ணமிருப்பின், அன்பர்கள் சிறிதும் காலந்தாழ்க்காது தங்கள் அன்பர்கள் எல்லோரையும் தூண்டி இதற்குச் சந்தாநேயராகச் சேர்த்து அனுப்புவதோடு தமிழ் அன்பர்கள் வீட்டில் நடக்கும், திருமணம் முதலிய விழாநாட்களிலும் மற்றும் பல சமயங்களிலும், நாளை, நாளை என்று எண்ணாது உடனே எமக்குத் தத்தம்மாலியன்ற உதவிப்பொருள் எவ்வளவு சிறிய தொகையாயினும் நன்கொடையாக உதவினால், அதை நாம் பெரிதும் பாராட்டி, "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்," என்னும் அரிய எண்ணத்திற்கு இணங்க எம்முடைய எண்ணமும் அன்பர்களுடைய எண்ணமும் சீர்பெற்று, உரம்பெற்று வளர்மதிபோல் வளர்ந்தோங்கும் என்பதில் யாதும் தடையில்லையென மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

திருச்சிராப்பள்ளி
குரோதன
தை 2,

இங்ஙனம், தங்கள் அன்புள்ள,
ம. உ. க. பஞ்சரத்தினம்,
தாள் ஆளர்.

உ

திரு முருகன் திருவடியே துணை

சுந்தர மூர்த்தி சுவாமிகள் துதி.

நேரிசை யாசிரியப்பா.

ஆர்க்லி யுலகில் அடியேன் நாயேன்
நேர்வரு மகனென நேர்ந்தே னெனினும்
குலத்தாற் பொல்லேன்! குணத்தாற் பொல்லேன்!
நலத்தாற் பொல்லேன்! நடையாற் பொல்லேன்!
அறிவும் பொல்லேன்! அறனும் பொல்லேன்!
செறிவும் பொல்லேன்! சிந்தையும் பொல்லேன்!
சீரும் பொல்லேன்! செயலும் பொல்லேன்!
யாரும் விரும்பா யாதா யினனே!
என்னினும் ஒன்றென் இயன்மூ தாதையர்
துன்னிப் புரிந்த தூத்தவப் பேற்றால்
திருத்தொண் டத்தொகை தெரிந்துல குய்யக்
கருத்தொடு பாடிக் கருணை செய்தாய்!
கயிலை நாதன் கவின்வடி வாவாய்!
மயிலை யிடங்கொளும் மலைவிலி யுண்ண
ஆலம் ஏந்திய அத்தத் தப்பா!
வேலங் கண்ணியர் விமலியைத் தொழுவார்
அமலினி கமலினி அரிவையர் விழைவால்
நமனை யுதைத்த நாதர் சொற்படி
ஆரூர் அதனில் ஆதி மறையவர்
சீரூர் சடையனார் செல்வப் பேறு
வசையறு கற்பின் வாழ்க்கைத் துணைவி
இசைஞா னியார்தம் எழிலார் கருவில்
வந்த கோவே! வாய்மை வேதிய!
முந்து பத்தியின் முதிர்ந்த பெரியாய்!
நரசிங்க முனையர் நயந்து வளர்க்க
பரசும் பண்பிற் பரிவின் வந்தாய்!
சடங்கவி மகளார் தன்மணந் தடுத்தே
இடங்கொளப் பரவையை இனியசங் கிலியை
இறைவர் கூட்ட இயைய வாழ்ந்து
கறையிருள் தன்னிற் கண்ணுதல் தன்னைப்
பரவை யகத்துப் பரவு தூதாய்

உரவ! இருமுறை உன்னி விடுத்தாய்!
திருவதி கையிலே திருவடி யிருமுறை
பெருமுடி மேலே பெருமான் சூட்ட
உருகும் அன்பில் உவந்தே ஏற்றாய்!
கருதா சைவக் கவின்றமிழ்ப் பாவல!
பேயோ டாடி பெரிதும் வேண்டி
நோயோ டிடவே றவலு நீரும்
பொதியின் சோறும் புகழ்ந்து தரவே
மதியின் வாங்கி மகிழ்ந்துண் டாயே!
அத்தமும் பொன்னும் அளவிலா நெல்லும்
சித்த முவந்து சிவன்றரப் பெற்றாய்!
செங்கல் பொன்னுச் சீரிதின் வரவும்
வெங்கண் முதலை விழுங்கிய பாலன்
ஆண்டுகள் கடந்தும் அழகின் வரவும்
காண்டரு பண்ணிசை கடவுட் டமிழாய்!
ஏயர்கோன் கலிக்காமன் இன்னுயிர் தந்தோய்!
மேய பரியில் மேன்மலைச் சேரன்
தொடர்ந்து முன்செலத் தோன்றுவெள் யானைமேல்
படர்ந்து கைலையிற் பரவநின்று
ஆதி பக்கல் அமர்ந்தரு ளண்ணால்!
மாதிடத் தாருயர் மருவு தோழனே!
திருமணக் கோலத் தேசுயர் மணியே!
பெருசவல் வழக்கே பேசிய பண்ப!
வன்றொண் டனென்னும் வாதியே யுன்னை
என்றும் போற்றும் இயல்புபெற் றதனால்
முருகனைப் பெற்ற முதல்வன்
திருவருட் கிலக்காத் திகழ்ந்தனன் யானே.

அ. சுந்தரநாதன்.

நமக்காக உழைப்பது யாது?

திராவிடன் ஒன்றே.

இதுவே நம்முடைய விடுதலைக்குப் பாடு படுகின்றது.

இதுவே இந்தியாவின் உண்மைச் சுயராஜ்ஜியத்திற்கு உழைக்கின்றது.

ஆகலான் நம் கடமை யென்ன?

இதனை ஆதரிப்பதே யாதும்.

இன்றே எல்லோரும் சந்தாதாரராய்ச் சேருங்கள்.

இயற்கைக் குறிப்பறிதல்*

(HINTS FROM NATURE.)

பொது (General.)

1. அளவிறந்த வண்ட மளாவும் பொருளாய்ப்
பிளவிறந்த சித்தின் பிறப்பாய்க்—களவிறந்த
நெஞ்சகத்து நேர்தெளிய நிற்கின்ற நின்மலனை
யஞ்சலித்து நிற்ப தறிவு.

2. அன்னை யனைத்துயிர்க்கும் அண்டத் தொகுதிகட்கும்
பன்ன வரிய பலபொருட்கும்—முன்னைப்
பிறந்துவளர்ந்தொடுங்காப் பீடுடை யைம்பூத
மிறந்திடமூர் தோன்றியற்கை யே.

3. பிறப்புருவில் லானையருட் பேர்வலனைப் பூத
இறப்புருவிற் காண இயலாச்—சிறப்பதனைக்
காண்டலினு மோங்கியற்கைக் கற்பனையி னின்றிலங்கு
மாண்ட அறிவுள்ளு மகிழ்வு.

4. ஐசேர் வரிவண்டை ஆனந்தப் பன்னிறங்கள்
மெய்சேர் விலங்கினத்தை மென்புள்ளை—நொய்சேர்ந்த
துவிமீனைநரனைத் தோற்றுவித்த பேரறிவை
யாவதோ போற்ற லறிந்து?

5. உருப்பொருளுக் குள்ளுவப்போம் ஓங்கு முயிர்சொல்
கருப்பொருளைக் கண்டு களிப்போம்—பருப்பொருளாம்
அண்டத் திமைவுகண்டால் அஞ்சலிப்போம் ஏமருவோம்
டண்டப் பகுதிகளைப் பார்த்து.

6. ஒழுங்கு மழகும் உலகத் தொளிர
ஒழுங்கழகு சேரொன்று முள்ளம்—மழுங்கலிலாக்
காட்சியார்க் கென்றுங் கரவா துளவுறுத்தும்
ஆட்சியோ டெங்கு மது.

7. நீங்கா வியற்கை நெடுமடியில் நாந்துயின்றே
ஆங்கால மின்ப மறந்துய்த்துப்—பாங்காக
அவ்வியற்கை தந்த அறிவொடுநாம் வாழ்கின்ற
செவ்வினை வார்க்கே தெளிவு.

8. சின்னப் புழுமுதலாய்ச் சீர்கொள் நரர்வரைக்கும்
பன்னுமுயிர்க் கூட்டமெலாம் பாலிக்கும்—அன்னை
யருளறிந்தார் ஆங்கவ் வளவில் அருளின்
பொருளறிந்தார் நன்றின் பொருட்டு.

---

* Copyright Reserved.

9. உண்மை யறிதல் உயர்சமயக் கோளாகும்
தண்மை யுடைமை தகுமறமாம்—அண்மைத்தே
செய்மைத்தாய் நாமெண்ணுந் தெய்வந் தெளிந்தார்க்குத்
தாய்மைத்தே பேரியற்கை தான்.

10. கற்று கனிந்ததன்றன் கன்றுக் கமுதூட்டல்
உற்றுயின் மெய்யா மொருசுகமே—மற்றுயின்
தெய்வந் தனக்குற்ற சீவர்க் கருள்சுரத்தல்
மெய்வந்த வானந்த மே.

தெய்வத்திற் றேன்று மகிலம்.

11. வெய்யோ னொளியே வெங்காடாய் நிலக்கரியாய்ப்
பைய உருமாறும் பான்மைத்தே—ஐயன்
அருளொளியி னாற்றல் அனைத்துலகு மாங்கு
பொருளெவையு மாகும் புரட்சி.

அணுவும் ஆகாயமும் (*Atom and Ether*).

12 பருப்பொருள்கள் யாவும் பகுத்தால் அணுவாம்
உருப்பணுவும் பேரணுக்கள் ஒட்டாம்—குருப்பவையும்
போகா அடல்கொண்டு போழா வெளிநிறைந்த
ஆகாய மென்னுமதி லாம்.

இழுப்பு (*Gravitation.*)

13. சூடுந் திணிப்புந் தொணிப்புந் தலங்கொளியுங்
கூடுங் குறையுங் குழைந்தாடும்—கேடிலருள்
மன்னு முயிரிலென்று மாளா தடற்பொருளில்
என்னுளு மாறு திழுப்பு.

ஊக்க மவிழ்த்தல் (*Unlimited Energy released by a Mind*)

14. ஊக்கம் அளவற் றுலகில் மறைந்திருந்தும்
ஆக்க மழகதனு லாவதில்லை—நீக்க
மறநிற்கு முள்ளம் அவிழ்த்தியற்கை வேலை
யறுவத்தை யுள்ளுவதா லுண்டு.

15. கண்ணுக் குலப்பளிக்கும் காட்சிப் பொருளழகு
நண்ணும் நறுமைகொளும் நாசிக்கே—உண்ணும்
பொருளுக் கழகுமட்டாம் போர்செய் கருவி
அருளாற் றவைக்கோ ரணி.

இயற்கை வனப்பு.

16. கண்ணு றியற்கையெழிற் காட்சிக் களஞ்சியத்தின்
உண்ணுடக் கண்டுவப்போம் ஒவ்வொன்றில்—பண்ணுரும்
பாவனையி லானந்தம் பல்படித்தாய் நிற்பதுபோல்
தேவனருள் நிற்றல் தெளிந்து.

17. பயிருலகின் பச்சைப் பசந்தும் பயனும்
உயிர்வகையி னுள்ளுக் குவப்பும்—செயிரறவே
மேவவைத்த நல்லியற்கை வேலைதனிற் காணீரோ
தேவவருட் சித்தச் சிறப்பு?

18. நீலம் பரந்த நெடுவானும் நேமிசூழ்
கோலம் பரந்த குரைகடலும்—ஞாலத்
துயிர்ப்பொருளுக் கெல்லாம் உவப்பளிக்க யாரும்
அயிர்ப்பதற்கின் றீச னருள்

காலையழகு (*The Beauty of Dawn*)

19. அருட்பெருக்கந் தோன்ற அனைத்துயிர்க்குங் காட்டும்
இருட்டிரையை நீக்கி இயற்கை—மருட்டிறமாய்
நென்னலைதான் விண்பொறித்த செஞ்சவிழ வின்பெழுப்பும்
பன்னருமக் காலைப் படம்.

மாலையழகு (*The Beauty of Sunset*)

20. அந்தித் திரையை அரங்கினுள்ளோர் யாவருக்கும்
சிந்தை கனியநிதஞ் சித்திரித்து—விந்தைநிற
மஞ்சு பரத்தி மணியரங்கிற் றாக்குகின்றான்
செஞ்சுடரோன் ஆடல் தெளிந்து.

ஈசன் உயிர்க்குறுதி (*God the support of creatures*)

21. பயிர்வகைக்கு வான்போல் பரமன் பரிந்திங்
குயிர்வகைக்கு நின்று றுறுதி—செயிரறவே
கார்போ லிருளுங் கதிரவன்போ லொள்ளறிவும்
சார்பாய் விரித்துத் தக.

22. நானு வியறகை உயிர்களின் பால் நாமறியத்
தானு வியற்கை தருவதுவே—தேனுர்
மலர்க்கரிய வண்டுமுதல் மானிடரீ றாகச்
சொலற்கரிய நன்மை தொகுத்து.

படைப்புப் புறம் பொழிவு (*Creative Evolution*)

23. புறம்பொழி வென்னும் பொதுநியதி வாயால
அறம்பொழிந்த தெய்வ மருளும்—திறம்படவே
அண்டப் படைப்பும் அளவிறந்த கோடியுயிர்ப்
பிண்டப் படைப்பும் பிரித்து.

வெய்யோன் இன்றியமையாமை

24. அன்ன மருந்தலெங்கே ஆகத் தழகெங்கே
மன்னர் பெருமையெங்கே வாழ்வெங்கே—பின்ன
லொளியா யிரம்பங் கொருமித்த வெய்யோன்
வெளியூடிலங்கா விடின்?

25. நீராவி வண்டியெங்கே நீர்காற் றுழுகலனும்
பாராளு மாந்தர் படையுமெங்கே—சாராக
வல்லிரும்பு நீர்கால் மராமா மியற்பொருளை
நல்லியற்கை நல்கா விடின்?

(தொடரும்)

தி. இலக்ஷ்மண பிள்ளை பி. ஏ., எம். எல். சி,
திருவனந்தபுரம்.

பஞ்சாட்சரபுரம்

உயர்திரு வாலையானந்த சுவாமிகள் பொது நலத்திற்காகவே பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க விலை உயர்ந்த சரக்குகளாலும் கிடைத்தற்கரிய அருமையான மூலிகைகளாலும் தமிழ் சித்தவைத்திய முறையிற் கூறியபடி ஒரு சிறிதும் பிசகாமல் செய்து பல ஆண்டுகள் உபயோகித்து, அநுபவத்திற் மிகச்சிறந்த அருமையான மருந்துகள். இம்மருந்துகள் இலாபத்தை ஒரு சிறிதும் கவனிக்காது பரோபகாரத்தை முன்னிட்டே செய்யப்பெற்றவை என்று நாம் அநுபவித்தறிந்ததனுல் துணிந்து மிகவும் உறுதியாகக் கூறுகிறேம். சுவாமிகள் மருந்தின் அபாரசக்தியை எம்மால் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாது. குழந்தைகள், பெண்மக்கள், ஆண்மக்கள், வயோதிகர், ஆகிய எல்லோருக்கும் ஏற்ற எல்லாமருந்துகளும் எம்மிடம் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

2. குமரித்தைலம் :-(விலை உயர்ந்த சரக்குகளால்செய்யப்பெற்றது. மூளைவேலை யுள்ளவர்களுக்கெல்லாம் மிகச்சிறந்தது. இதற்கு நிகரான தைலம் வேறு கிடையாது.) பெரியபுட்டி 2—4—0 ; சின்னது 1—8—0.

3. நேத்திராஞ்சனி அரக் :—கண்ணில் உண்டாகும் எந்தவிதமான நோயையும் பஞ்சாகப்பறக்கடிக்கும் தன்மையுள்ளது. இதை உபயோகப் படுத்தினவர்கள் இழந்த கண்ணை மீண்டும் பெறுவார்கள் என்பதில்யாதும் ஐயமே யில்லை. பெரியபுட்டி, 1—0—0; சின்னது 0—12—0.

4. பற்பொடி :—(தந்தரோக நிவாரணி) பற்பொடிகளெல்லாவற்றிலும் மிகச்சிறந்தது. இதை உபயோகப்படுத்தினவர்கள் பற்கள் முத்துப் போல் வயோதிகம் வரையில் உறுதியாகவிருக்கும் என்பதை அநுபவத்தில் தெரிந்து கொள்வார்கள். ஒன்று 0—3—0; 1-டஜன் 2—0—0.

5. குழந்தைகளுக்கு முக்கியமாகவும் அவசியமாகவும் வேண்டிய மருந்துகள்.—கோரோசனை மாத்திரை, காக்கரட்டான் மாத்திரை, இராசகுகபேதி மாத்திரை, சுரமாத்திரை, பாலரக்ஷாமணி, ஆகியவும் பிறவும் எம்மிடம் கிடைக்கும்.

6. வீரியவிர்த்தி மாத்திரை.—இரத்தத்தைச் சுத்திசெய்து சொன்ன வேண்டுமோ? நித்திரையில் உண்டாகும் இந்திரிய நஷ்டம் நிற்கவேண்டுமா? அஜீரணம், பித்த ஏப்பம் நீங்க வேண்டுமா? வீரியவிர்த்தி மாத்திரையை உபயோகிக்க அவைகளெல்லாம் நீங்கித் திடமுண்டாகி ஆண்புலிபோல் உலாவலாம். ஒருபுட்டி 1—8—0.

7. சர்வ ரணசஞ்சீவி.—மேகரணங்கள், வெட்டுக்காயங்கள், புரைப் புண்கள் முதலியவைகளுக்கு வைரி யிதுவே. குதிரை, மாடு, ஆடு முதலிய மிருகங்களுக்குண்டான இரணங்களை மாற்றுவதில் பிரசித்திபெற்றது

8. தேள்கடிமருந்து:-அமுதவர்கள் அரைநிமிஷத்தில் சிரிப்பார்கள் தேளிக்கடி, பூரான்கடி, குளவிக்கடி, சிலந்திக்கடி முதலிய கடிகளும். உடனே தீரும். புட்டி 1-க்கு 0—0—8.

கணபதி பண்டசாலை, 25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.

தமிழர்,

ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு.

மலர் க.] திருச்சிராப்பள்ளி, குரோதன, மார்கழி [இதழ் கூ.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"—(திருக்குறள்)

தற்காலத்திய தமிழ்ச்சுவடிகள்.

(355-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி உரைநடை நூல்களை யெடுத்துக்கொண்டால் அவைகளுள் தற்காலத்தில் அதிகமாக விரும்பப்படுபவை நாவல்களேயாம். ஆயிரக் கணக்காக நமது நாட்டில் நாவல்கள் உலவி வந்தாலும் ஒன்றிரண்டு தவிர்ந்த மற்றெல்லாம் ஒரு காசுக்கும் உதவாதவை. அவைகள் களங்கமில்லாத மக்களுடைய உள்ளத்தில் அழுக்கைப் புகுத்தித் தப்பான எண்ணங்களுக்கும் பேராசைக்கும் அவர்களை இரையாக்கி அவர்களுடைய மனதை வருத்தி வாட்டமுறச் செய்து அவர்களுடைய வாணாளை வீண்போதாக்கிவிடுகின்றன. நாவல்கள் நாடகங்களைப்போல அதிகப் படிப்பில்லாதவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவும் தூய்மையான இன்பத்தை அவர்களுக்குக் கொடுக்கவும் தகுந்த கருவிகள். மக்களின் கடமைகளையும், அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையையும், அவர்கள் பின்பற்றவேண்டிய கொள்கைகளையும், இனிமையாக எளிதிற் பாமரமக்களுக்கு எடுத்துக்காட்ட நாடகங்கள், நாவல்கள் போன்ற அருங்கருவிகள் கிடைக்கா. நமது "நாவலர்கள்" தம் சுவடிகளில் ஆண் பெண்பாலரைச் சந்தியில் இழுத்து ஏதேதோ மனதில் வந்ததையெல்லாம் ஊளறி

Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS-41

வைத்துப் பக்கத்தை நிரப்பிவிடுகிறார்கள். அவைகளையும் நம்மவர்கள் ஆவலுடன் படித்து முடிவில் துன்புறுகிறார்கள். ஆகையால் சிறுவர்களை நாவல் படிக்கப்படாதென்று கண்டிக்கவேண்டி நேரிடுகிறது. ஆங்கில மொழியிற்கூடப் பல்லாயிரக் கணக்கான பயனற்ற நாவல்கள் இருக்கின்றன. ஆனால் அவைகளுடன் போதுமான நல்ல நாவல்களும் கிடைப்பதால் அக்குற்றம் நமக்குத் தோன்றுவதில்லை. எனவே உலக அனுபவமுள்ள பெரியார் நாவல்கள் எழுதத் தலைப்பட்டால் அவைகளை எவரும் இகழார். அவை தமிழுலகிற்குப் பெருமகிழ்வையும் உறுதியான பயனையும் அளிக்கும்.

உரைநடைச் சுவடிகளையும் செய்யுட்களையும் கூடியவரை எளிய நடையில் எழுதுவதே சிறந்ததாம். அருமையான நடையில் எழுதுவதே நிரம்பிய புலமைச்சுவையைக் காட்டுமென்பதாகச் சில புலவர்கள் உள்ளத்தில் ஓர் எண்ணம் நிலவிவருகின்றது. தமிழிலுஞ்சரி, மற்றெம்மொழியிலுஞ்சரி, பெரும்புலவர்கள் யாவரும் எளிய நடையில் உயரிய பொருளை அழகுபெற அமைத்ததற்காகவே பாராட்டப்படுகின்றனர். நமது புலவர்கள் இவ்வுண்மையை என்றும் மறக்கலாகாது.

இச்சிறு கட்டுரையை முடிப்பதன் முன்னர், பிறமொழிகளிலுள்ள சுவடிகளை நம்மொழியில் பெயர்த்துக் கொள்ளவேண்டிய அவசியத்தைப்பற்றிச் சற்று எழுத விரும்புகின்றோம். பலமொழிகளிலுள்ள புகழ்பெற்ற நூல்களைப்படிப்பதும் அவைகளைத் தாய் மொழியில் மொழிபெயர்த்துக் கொள்வதும் ஒருவனுக்குத் தனது மொழியிற் சொந்தமாகச் சுவடிகள் எழுதப் பேருதவியாயிருக்குமென்பதில் ஐயமின்று. அத்துடன் மக்களுக்கு மற்ற நாட்டாருடைய நடையுடை பாவனைகளும் எண்ணங்களும் தெரியவரும் நாவல்கள் மட்டுமல்ல; மற்ற எல்லாவகையான சுவடிகளையுமே கற்றறிந்தவர்கள் பிறமொழிகளிலிருந்து கூடியவரையில் சுவையும் பொருளுங்குன்றாவாறு நமது மொழியிற் கொண்டுவரின் தமிழகம் பெரும்பயனடையும். அறிவுநூற்சுவடிகளும் செய்யுட்களும் நாடகங்களும் பல மொழிகளிலிருந்து நமது மொழிக்குக் கொண்டுவரப் பல புலவர்கள் உழைத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்டவைகள் பொதுவாக நமது தமிழ் மொழியின் நிலைமையை உற்று நோக்கும்போது ஒருவருக்கு உண்டாகக் கூடிய சாதாரண எண்ணங்கள். உண்மையான இலக்கியம் எக்காலத்துக்கும் எந்த நாட்டாருக்கும் எச்சாதியாருக்கும் ஒரே விதமாக இன்பமளிக்குந்தன்மைத்து. நமது தமிழ்ப்புலவர்கள் மேற்காட்டப்பட்ட குற்றங்குறைகளை நீக்கிச் சிறந்த பல சுவடிகளைத் தாமாக எழுதியோ, மொழிபெயர்த்தோ தமிழுலகுக்குத் தருவதற்கென இடையறாது உழைப்பார்களென்று நம்புகின்றோம்.

தாள் ஆளர்.

யாவனத்தீவின் குகைகள்

(360ம் பக்கத் தொடர்ச்சி)

2 சிறிய குகைகள்

இவைகள் எண்ணிக்கையில் நான்கு. பெரிய குகையைப்போல் இவை அவ்வளவு அதிசயமாக இல்லாவிடினும் மூந்நூறு கசதூரஞ் சற்று நடந்துசென்று காணத்தகுந்தவையே; இவைகள் கிழக்குநோக்குகின்றன. பெரிய குகையிலிருந்து வலப்புறமாகச்செல்லும் பாதைதான் இவைகளுக்கு வழி.

இச்சிறு குகைகளில் முதற்குகையில் இரண்டு பெரிய அறைகளும், முன்மண்டபமொன்றும், தாழ்வாரமொன்றும், ஓர் வெளிமுற்றமும் உள்ளன. முன்மண்டபம் நான்கு சாதாரணமான சதுரத்தூண்களாலும் இரண்டு போலித் தூண்களாலும் தாங்கப்பட்டு வந்தது. ஆங்குள்ள இரண்டு தொட்டிகளும் 1922ல் தரையின் கீழிருந்து வெளிப்படுத்தப்பட்டன. சித்திரவேலை சிறிது காணப்படினும் உருவங்கள்யாவும் அடையாளந்தெரியாதபடி சிதைந்து விட்டன. இக்குகை ஐந்தாவது நூற்றாண்டைச் சேர்ந்ததாக விருக்கலாம்.

இரண்டாவது குகையில் இரண்டு பக்க அறைகளுள்ள ஓர் இலிங்கச்சந்நிதியும், ஓர் முன மண்டபமும், தாழ்வாரமும், வெளிமுற்றமும் உள்ளன. குகையின் எண்பது அடி நீளத்துக்கும் ஒரு கொசலை முன்னர் இருந்ததாம். அது நான்கடி அகலமுள்ளது. இரண்டு பாகமாகப் பிரிந்து ஒவ்வொன்றிலும் சிறு சிறு நிற்கின்ற உருவங்களிருந்தன. முன் மண்டபத்தின் கூறை பத்தடியகலமுள்ளதாய் உருண்ட தலைப்பும் சதுர அடிக்கல்லுமுடைய உருண்டு நீண்ட ஆறு தூண்களால் தாங்கப்பட்டு வந்தன. தூண்களெல்லாம் விழுந்துவிட்டன. வலப்புறத்தில் ஒரே ஒரு போலித்தூணும் கொசலையில் ஒரு சிறு பகுதியுமே இப்பொழுது காணப்படுபவை. சந்நிதியின் வாயில் மிக அழகான சித்திரவேலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இருபக்கமும் ஒவ்வொரு வாயிற்காப்போனும் அவனுக்கு மேல் ஒருயாளியும் அதற்கும் மேல் இரண்டு அப்சரர்களும் செதுக்கப்பட்டுள்ளார்கள். வாயிலுக்கு மேல் நடுவில் ஆறு கைகளோடு காணப்படும் உருவம் பரமசிவனுடையது. அவர்க்கு இருபுறமும் ஒவ்வொரு முதலையுருவம் உளது. இந்தக்குகை ஐந்தல்லது ஆறாவது நூற்றாண்டினது என்று கண்டுபிடிப்பதற்கு அம்முதலைகளின் வால் சித்திர ஆராய்ச்சிக்காரருக்குப் பேருதவியாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். வலப்புறத்தில் தாழ்வாரத்துக்கப்பால் கரடுமுரடான ஓர் பெரும் துளை ஒன்று இருக்கிறது. அதிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டைச்சேர்ந்த சில உருவங்கள் 1922ல் தோண்டியெடுக்கப்பட்டன,

மூன்றாவது குகையில் இரண்டு பக்க அறைகளோடுகூடிய ஒரு சந்நிதியும் இரண்டு தூண்களாலும் இரண்டு போலித்தூண்களாலும் தாங்கப்பட்டுப் பின்பாகத்தில் ஓர் சிறு அறையையுடைய ஓர் மண்டபமும், இதுபோலவே வலப்புறம் மற்றோர் மண்டபமும், அதற்கப்பால் இரண்டு சிறு அறைகளும் உள. இக்குகையிலுள்ள ஓர் தூணின் தலைப்பும் ஓர் போலித்தூணும் இரண்டு சிறு அறைகளின் வாயில்களுக்கு மேலுள்ள சித்திரவேலைப்பாடும், இரண்டாவது சிறு குகைக்கும் பெருங்குகைக்கும் இடையிற் பல காலங்களில் சித்திரப் பயிற்சி இருந்த பல்வேறு நிலைகளைக் காட்டுகின்றமையால் உற்று நோக்கற்பாலவை. இரண்டாவது குகையிலுள்ள தூணின் தலைப்பு கறடுமுரடாகவும் இந்தக்குகையிலுள்ளது பெரியகுகையிலுள்ளதைப் போல் அவ்வளவு அழகாக இல்லாவிடினும் மிகச்செம்மையாகவும் செய்யப்பட்டுமிருக்கின்றன. குதிரை இலாடம்போன்ற சித்திர வேலைப்பாடுகளும் சித்திரப்பயிற்சியின் இடைக்கால நிலைகளைக்குறிப்பிக்கின்றன.

பாதைவழியாக இன்னும் சிறிது சென்றால் குன்றின் அடியில் நான்காவது குகையுள்ளது. அது 1922-ல் சிறிது சுத்தப்படுத்தப்பட்டது. அதன் வாயில் கல் மண் முதலியவற்றால் மூடப்பட்டிருப்பதால் உள்ளே காணக்கூடியவை அதிகமில்லை. அது ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகவிருக்கலாம். அதற்குச் சாதாரணமான சதுரத் தூண்கள் தாமிருக்கின்றன. அந்தக்குகையைச் சுத்தப்படுத்தியபோது சித்திர வேலைப்பாடுகளாவது சிற்பத் துணுக்குகளாவது அகப்படவில்லை.

பெரிய குகையோடு ஒட்டினாற்போலுள்ள இந்நான்கு சிறு குகைகளுடன் பக்கத்துக் குன்றிற்கு வட கிழக்கில் வேறிரண்டு குகைகளும் உள. கிழக்கேயுள்ளது முற்றுப் பெறவில்லை. ஆனால் பாறையில் செதுக்கத் தொடங்கியுள்ள இரண்டு போலித் தூண்களும் மூன்று அறைகள் வெட்ட எண்ணமிருந்திருப்பதாகக்காட்டுகின்றன. மேற்கே யுள்ள குகையில் நீண்ட முன் மண்டபமொன்றும் ஓர் சந்நிதியும் இருபக்கமும் ஒவ்வோர் அறையும் உள. முன் மண்டபம் நான்கு நேர்த்தியான தூண்களாலும் இரண்டு போலித் தூண்களாலும் தாங்கப்படுகிறது. இவைகளில் ஒரு தூண் உடைந்துள்ளது. முன் மண்டபத்தின் நடுவில் சந்நிதி வாயிலுக்கு முன்பு சற்று உயர்ந்த வட்டமான பீடமொன்று இருக்கிறது. இது நந்திக்கு ஆசனமாக இருந்திருக்க வேண்டும். இத்தப்பீடத்துக்கு இருபக்கத்திலும் சிங்கங்கள் போல இரண்டு உருவங்கள் காணப்படுகின்றன. இரண்டு அறைகளுடைய கதவுகளின் தலைப்பிலுள்ள சித்திர வேலைப்பாடுகள் தானா சில்லாவிலுள்ள புகழ்பெற்ற யோகேசுவரி குகையிலுள்ளவை போற் காணப் படுகின்றன.

(முற்றும்.) (சி. வேதாசலம் பி. ஏ., பி. எல்.)

கிள்ளி வளவன்.

கிள்ளிவளவன் என்னும் பெயருடைய சோழமன்னர் இருவர் இருந்தனர். ஒருவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். மற்றொருவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளி வளவன். முன்னவன் வரலாறே இங்கு ஆராயப்படுவது. இவன் சோழன் கரிகாற் பெருவளத்தானுக்கு மைந்தனென்றும், மணிமேகலையிற் கூறப்பட்ட உதயகுமரன் றந்தையாகிய மாவண்கிள்ளி என்பான் இவனேயென்றும், காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து செங்கோலோச்சிய இம்மன்னன், மணிமேகலைக் காப்பியங் கூறுமாறு அப்பட்டினத்தைக் கடல் கொண்டபின் உறையூரைத் தலை நகராகக் கொண்டு அரசாண்டனனென்றும் கருதப்படுகின்றது. சோழன் நலங்கிள்ளி, மாவளத்தான் என்னும் இருவரும் இவனுக்குத் தம்பியராவர்.

இக் கிள்ளிவளவன் ஒப்பற்ற பெருவீரனாகவும் பெருவள்ளலாகவும் பெரும் புலவனாகவும் விளங்கினான். ஆலத்தூர்கிழார், வெள்ளைக்குடி நாகனார், மாறோகத்து நப்பசலையார், ஆவூர் மூலங்கிழார், கோவூர் கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாததனார். ஐயூர்முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்னும் புலவர்பெருமக்களாற் புகழ்ந்துபாடப்பெற்ற பெருஞ்சிறப் புடையன் இவன். இவர்கள் இவனைப்பாடியபாட்டுக்களெல்லாம் எட்டுத்தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றிலுள்ளன. அவற்றிலிருந்து இவனுடைய வீரம், வண்மை முதலியனவேயன்றிப், புலவர்கள் பால் இவன் எவ்வளவு அன்பும் மதிப்பும் உடையவனாய் அவர்கள் கூறும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளும் இயல்பினனாயிருந்தான் என்பதும் விளங்கும். அவற்றுட் சிலவற்றை இங்கே காட்டுதும்:

ஆலத்தூர் கிழார் என்னும் புலவர் இம்மன்னன் பால் பரிசில் பெற்றுச்செல்லும்பொழுது, புலவர்களோ டளவளாவியிருக்கும் இன்பத்தையே விரும்புமியல்புடைய இவ்வளவன் 'எம்மை நினைத்தும் வருவீரோ?, என ஆராமையுடன் கூறினான். அது கேட்ட புலவர் தமது நன்றியறிவைத் தெரிவிப்பாராக,

“ஆன் கொலை முதலியன புரிந்ததீவினையாளர்க்கும் அப்பாதகத்தினைப் போக்கும் வழியும் உளவெனவும், நிலம் கீழ்மேலாங்காலமாயினும் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்தோர்க்கு உய்தியில்லையெனவும் அறநூல் கூறாநின்றது; வேந்தே, 'கரப்பில்லாத உள்ளத்துடனே இனியமொழிகள் பலவுங்கூறி மன்றத்திடத்தே நறிய உணவினை அருந்தச்செய்து, அங்ஙனம் அருந்திய பாணர்க்கு நீங்காத செல்வம் எல்லாவற்றையும் அளித்தோனும் எமது வேந்தனுமாகிய வளவன் வாழ்வானாக' என்று நின்பெருமை பொருந்திய தாளைப்

பாடேனுயின் பல கதிர்களையுடைய ஆதித்தன் தோன்றுதலறியான்; யானே தஞ்சம்; பெரும; இவ்வுலகின்கண் சான்றோர் செய்த நல்வினையுண்டாயின் இமயமலையின்கண் மேகங்களெல்லாந்திரண்டு கார் காலத்துச் சொரிந்த மழைத்துளியினும் பல காலம் வாழ்வாயாக" என்னும் கருத்தமைந்த செய்யுளைப் பாடினர்.

கோவூர் கிழார் என்னும் புலவர் இவனுடைய அஞ்சாமையும் வீரமும் புலப்பட "காலனும் தான் உயிர்கொள்ளலாகும் காலம் வருந்துணையும் பார்த்திருப்பன்; அங்ஙனம் காலம் பாராது, வேற்படையினையுடைய பகையரசர்கள் கெடும்படி வேண்டியவிடத்துக் கொன்று வெல்லும் போரில்வல்ல வேந்தே, எட்டுத்திசையும் எரிகொள்ளி எரிந்து விழவும், மரத்தின் உலர்ந்த கொம்புகள் தாமே பற்றிக் கொள்ளவும், ஞாயிறு பலவிடத்துச் செறிந்து தோன்றவும், அஞ்சத் தகுவனவாகிய புட்கள் குரலிசைக்கவும் நனவிலே உற்பாதங்கள் கண்டும், பல் நிலத்தில் விழவும், தலைமயிரில் எண்ணெய் வார்க்கவும், பன்றியேற்றை ஏறவும், ஆடையைக்களையவும், படைக்கலம் தான் இருந்த கட்டிலுடன் கவிழவும் இங்ஙனம் கனவிலே பொறுத்தறகரிய வற்றைக்கண்டும் அஞ்சாது போர் செய்யும் வலியையுடையோய்". என்று கூறியுள்ளார்.

இடைக்காடர் என்னுஞ் சான்றோர் இவனுடைய கொடையும் வீரமும் விளங்கித்தோன்ற "மலையினின்றிழிந்து கடலை நோக்கியோடுகின்ற பல யாறுகளைப்போலப் புலவர் யாவரும் நின்னை நோக்கினர்; நீ தான் அவர்கட்குப் பரிசில் கொடுத்தற்பொருட்டு மருந்தில்லாத கணிச்சியென்னும் படையைச் சுழற்றிக் கூற்றுவன் வெகுண்டாற்போலும் வலியுடனே மாற்றுவேந்தரின் நிலத்தைக் கொள்ளக் கருதினுய்" என்றனர்.

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர்.

"நீ, உடன்று நோக்கும் வாயெரி தவழ
நீ, நயந்து நோக்கும் வாய்பொன் பூப்பச்
செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்
வெண்டிங்களுள் வெயில்வேண்டினும்
வேண்டியது விளைக்கும் ஆற்றலை"

என்று இவனைப்பாடினர், மற்றும் பலர் பலவாறு இவனைப் பாடியிருக்கின்றனர்.

இவ்வேந்தன் இங்ஙனம் புலவர் பலராற் புகழ்ந்து பாடப் பெற்றதேயன்றி, ஓரோவழித் தான் இழுக்கி நடந்த விடத்து அவர்களால் இடித்துரைக்கப் பெற்றுமுள்ளான். உலகிலே குற்றஞ் சிறிதுமில்லாதவர் எத்துணையர்? விருப்பு வெறுப்புக்களோடு கூடி நிலத்தினை ஆண்டு வருகின்ற ஒரு மன்னன் அணுவளவுங் குற்றமின்றியிருப்பதென்பது எளிதாகுமோ? திருக்கோவலூரிலிருந்த சிற்றரச

னும் மூவேந்தரும் போரின்கண் தத்தமக்குத் துணையாக வேண்டி இரந்தழைக்கும்படியான பெரு வீரமும் வரையாத வள்ளன்மையும் உடையவனும் கபிலர் முதலிய புலவர் பெருமக்களால் மிகப்புகழ்ந்து பாடப்பெற்ற பெருமை வாய்ந்தவனும் ஆகிய மலையமான் திருமுடிக் காரியின்பால் இம்மன்னன் மிக்க பகைமை பூண்டிருந்தான். அதற்குக் காரணம் தனக்குப் பகைவனாய் உறையூரிலிருந்த சோழனாகிய நெடுங்கிள்ளி என்பானுக்குத் திருமுடிக்காரியானவன் போரின்கண் துணைபுரிந்ததே யாதல் வேண்டும். இந் நெடுங்கிள்ளியைக் கிள்ளி வளவன் தன்றம்பியாகிய நலங்கிள்ளியால் காரியாறு என்னுமிடத்திற் கொல்வித்தானென்பது

> "ஆர்புனை தெரிய விளங்கோன் றன்னால்
> காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
> வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி"

என மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரால் மணிமேகலையிற் கூறப்படுதலானும், நெடுங்கிள்ளி காரியாற்றுத் துஞ்சிய என்னும் அடையுடன் வழங்கப்படுதலானும் அறியக்கிடக்கின்றது. இந்நெடுங்கிள்ளிக்குத் துணைபுரிந்தமையால் தனக்குப் பகைவனாயின காரியின் மக்கள் ஒரு கால் தன்னிடத்தகப்பட்டபொழுது கிள்ளி வளவன் நினைத்தற்கு மரிய கொடுஞ்செயலொன்றைச் செய்யத் தொடங்கினன். அச்செயலாவது மலையமான் மக்களை யானைக்காலால் இடறுவிப்பதே. கோவூர்கிழார் என்னும் புலவர்க்கு இச்செய்தி தெரிந்தது. அருள் நிறைந்த நெஞ்ச முடைய புலவர் நிகழவிருக்கும் இக் கொடுஞ் செயலையறிந்தும் வாளாவிருப்பரோ? கிள்ளிவளவனை விரைந்தணுகி அவனைப்பார்த்து "அரசே, நீ தான் ஒரு புறாவுற்ற துன்பத்தையும் மற்றும் பிறவுயிர்களுமுற்ற துன்பங்கள் பல வற்றையும் போக்கிய செம்பியன் மரபினுள்ளாய்; இவர்தாம் அறிவால் உழுதுண்ணும் கற்றோருடைய வறுமைக்குத் தாம் அஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையாரின் மரபினுள்ளார்; அன்றியும் இவர்கள் தம்மைக் கொல்லவென நிற்கின்ற யானையைக்கண்டு தாம் இளமையால் முன்பு வெருவியழுத அழுகையையும் மறந்திருக்கின்ற சிறு பிள்ளைகள்; இம்மன்றத்தை மருண்டு நோக்கி முன்பு அறியாததோர் வருத்தத்தையும் உடையர்; இது கேட்டாயாயின் நீ விரும்பியதைச் செய்வாயாக" என்னும் கருத்துள்ள பாட்டொன்றைக் கூறினர். இங்ஙனம் புலவர் பெருமான் மனங்கரைந்துருகப் பாடிய பாட்டைக் கேட்டபின் கிள்ளிவளவன் அப்பிள்ளைகளைக் கொல்லாது விடுத்திருப்பானென்பதில் ஐயமில்லை. (தொடரும்)

பண்டிதர், ந. மு. வேங்கடசாமி நாட்டார்

*வாணிகம்

(377-ஆம் பக்கத் தொடர்ச்சி).

இன்னும் கல்லாதவரைக்காணலும், அவர் சொற்கேட்டலும் ஆகாவெனவும், கல்லாதவர்க்குக் கல்லாதவரே நல்லவராய்க் காணப்படுவரெனவும், கல்லாதவர் கடவுளது கருத்தை அறியமாட்டாரெனவும், பெரியார் அருளியிருக்கின்றார்...

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர் சொற்கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்து அறியாரே"

எனவே, கல்வியறிவு பெறாமற் காலங்கழிப்பது மிகவும் பொல்லாத குற்றமாய் முடிதல் பெறப்படுகின்ற தன்றோ? ஐரோப்பிய, அமெரிக்கா வியாபாரிகளெல்லாம் கல்வியில் வல்லவராய் விளங்கித் தமது வியாபார முயற்சியை நிரம்பவும் பெருகச்செய்து உலகத்தார்க்குப் பல நன்மைகளை விளைவித்து வருதலோடு, கல்விப் பொருளையும் எங்கும் பரவச்செய்து மக்கள் மன அறிவையும் துலக்கி வருகின்றார்கள். தமிழ் வியாபாரிகளோ பெரும்பாலும் கல்வியில்லாதவர்களாயும், கல்வியைப் பரவச்செய்வதில் கருத்தில்லாதவர்களாயும் இருக்கின்றார்கள்! இவர்களது இந்த நிலைமை பெரிதும் வருந்தத்தக்க தன்றோ?

அழியாத செல்வமாகிய கல்வியைப் பெறாதவரையில் அழியுஞ் செல்வமாகிய பொருளைப்பெற்று யாது பயன்?

"தெய்வச் சிதம்பரதேவா உன் சித்தம் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பனமாம்மன்னர் வாழ்வும் புவியுமெங்கே
மெய்வைத்த செல்வமெங்கே மண் டலீகர்தம் மேடையெங்கே
கைவைத்த நாடகசாலை யெங்கே யிது கண்மயக்கே,"

என்றும்,

"வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிகஎளிது கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்கப் புறம்பாகப் பொருள்தேடி யுழல்கின்றாரே"

என்று நமது பெரியார்கள் அருளியாங்கு, கல்வியறிவில்லாதவர்க்கு அறிவும், அறிவில்லாதவர்க்கு அன்பும், உண்டாகாமையால், இவ்விரண்டுமில்லாதவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பெரிய வியாபாரத்தை

* தஞ்சை வர்த்தக சங்க ஆண்டு விழாவில் ஆண்டிப்பட்டி இறை திரு. பெத்தாச்சி செட்டியார் அவர்கள் அவைத்தலைமையில் இப்பத்திரிகை ஆசிரியர் நிகழ்த்திய விரிவுரை.

ஒற்றுமையாய் வாழ்ந்து நடாத்தி புகழையும் புண்ணியத்தையும் அடைதல் நமது நாட்டில் அருமையாய் இருக்கின்றது. அறிவும் ஆற்றலும் உடையவரே தனிமையாயிருந்து ஒரு பெரிய வியாபாரத்தை நடத்தல் இயலாதாயின், அவ்விரண்டும் இல்லாதவர் அதனை நடத்துவது எப்படி? ஒருபெரிய வியாபாரத்தை ஒருவரே தனியாகவிருந்து நடாத்துவது பலவகையாலும் அல்லலுக்கு இடமாகும்; வருகிற இலாபமெல்லாம் தாமே அடையவேண்டுமென்னும் எண்ணத்தால் தனியே வியாபாரம் நடத்துவோர் பெரும்பாலும் ஊதியம் பெறாமல் பழுதுபடுவர். ஓயாக்கவலையாலும் ஓயா முயற்சியாலும் ஊண்உறக்கமின்றி, ஆறுதல் சொல்வாரும் இன்றித் துணைசெய்வாருமின்றித் துன்பத்தையே உழப்பர். ஆதலால் தக்கவர் பலரைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு ஒரு பெரிய வியாபாரத்தைச் செய்பவர்களே அத் துன்பங்களினின்றும் விலகிப் போதுமான ஊதியத்தையும் இன்பத்தையும் பெற்றுத் தாம் மனமகிழ்ந்திருப்பதோடு, தம்மைச் சேர்ந்த கூட்டாளிகளையும் அங்ஙனமே இன்புற்றுக் களித்திருக்கச் செய்வர். ஒருவரே ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டுவதென்பதும், ஒருவரே விதை விதைத்து, ஒருவரே ஒரு நிலத்தைச் செப்பனிட்டு, உழுது, பயிரிட்டு விளைந்த வெள்ளாண்மையை வீடு சேர்ப்பதென்பதும் இயலாதவாகும். ஒரு குடும்பத்தை நடாத்தவும், ஒரு கல்யாணம் செய்யவும் எப்படி நாம் பலபேருடைய உதவியை நாடி நிற்கிறோமோ அதுபோல நமது நாட்டு வியாபாரம் சீர்பெற்று ஓங்கவேண்டுமானால் தகுந்தவர் பலர் ஒன்றுகூடி ஒருமை மனதுடன் ஊக்கமாக நடத்தினால் நாம் எவ்வளவோ இலாபம் அடைய ஏதுவாக விருக்கும். இதுபோலவே ஒரு பெரிய வியாபாரத்தைப் பலர் கூடி நடாத்துவது எளியதும் முடிவில் இன்பம் தருவதும் ஆகும். இந்த நுட்பத்தை நன்கு அறிந்துணர்ந்த ஆங்கிலேயரும் அமெரிக்கர்களும் கூட்டு வியாபாரம் செய்து ஒரு நாட்டின் செல்வத்தையே பிற நாட்டார் கவர்ந்து செல்ல ஏதுவாகின்றது. தாம் வியாபாரஞ்செய்து வந்த ஊதியத்தைக் கொண்டு தம்மையும் தம்முடைய நாட்டையும் நல்வாழ்வில் மேம்படச் செய்கிறார்கள், நம் தமிழ் வியாபாரிகளோ, இந்த நுட்பத்தை அறிதற்கு ஏற்ற கல்வியறிவும் ஈர நெஞ்சமும் பெரும்பாலும் இல்லாதவராய் இருத்தலால், தாமே எல்லாச் செல்வமும் ஒருங்கே அடைய வேண்டுமென்னும் அவாவும், மற்றவர்கள் எவ்வகையிலேனும் மேம்படலாகாதென்றும் அழுக்காறும் பெரும்பாலும் இருக்கக்காண்கின்றோம். அந்தோ! இதனாலே நமது தமிழ் நாடும் தாழ்வடைகின்றதன்றோ!

மக்களாய்ப் பிறந்த நாம் எவ்வளவுகாலம் இவ்வுலக வாழ்வில் நிலைத்து இருப்போமென்றும் இவ்வாழ்வை விட்டுப் போகுங்கால் எவ்வகையாகச் செல்வோமென்றும் சிறிது நினைத்துப் பார்ப்போமாயின் இங்ஙனமெல்லாம் நாமே உயரவேண்டுமென்னும் எண்ணம்

நம்பால் தோன்றாது. உண்மையோடு நாம் ஒருவரை யொருவர் அளவளாவி ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து அன்பையும் அறிவையும் வளர்க்கச்செய்வதே இந்த மானிட வாழ்க்கையின் முடிந்தபேறு என்றும், இங்ஙனம் ஒருவருக்கொருவர் துணைவராயிருந்து வாழுதற்கு உதவியாயிருப்பதே செல்வத்தின் செயலாவதன்றி அச் செல்வத்தை எவ்வளவு மிகுதியாகப் பெற்றாலும் அஃது இறக்குங்கால் கூடவரமாட்டாதென்றும் வியாபாரிகளாகிய நாம் அடிக்கடி நினைவு கூர்தல் வேண்டும்.

உலக சுகமன்றி மறுமை யின்பமுங் கூட இப்பொருளில்லையேல் எளிதிற்பெற இயலாதென்பதே மேலோர் திருவுள்ளமாகும் "அருள் என்னும் அன்பீன் குழவி பொருளென்னும், செல்வச் செவிலியா லுண்டு." என்பதால் மறுமைக்குரிய அருள் வளர்ச்சிக்கு இம்மைக்குரிய பொருள் காரணம் என்பதைக் கூர்ந்துணரவேண்டும். இதுபற்றியே, "ஆராயிற்றானே அறம் பொருள் இன்பமென்று, ஆராரிவற்றினிடை யதனை யெய்துவார், சீராரிருதலையு மெய்துவார்," எனவும் "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்," எனவும், "குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன் கைத் தொன்றுண்டாகச் செய்வான் வினை," என்றபடி எந்த அருமையான செய்கையும் நம்மவர் முறைப்படி செய்தால் இந்த நாட்டையும் நம்மதாக்கிக்கொள்வதோடு பிற நாடும் நம்முடையனவாகத்தானே வந்து அமரும். இதற்கு மேனாடுகளே தக்க வழிகாட்டிகளாயிருக்கின்றன. பொருள் வருவாயின்றி ஏழ்மையுற்ற நாடு எத்துணை ஞான வலிமை பழங்காலமுதலே பெற்றிருப்பினும் அவையெல்லாம் பெரும்பாலும் போலியாகிப் பிறர்கண்டு நகையாடற்கு இடனாகும். என்னை? உலகவாழ்வுக்கு இன்றியமையாத பொருணிலையின் தத்துவத்தைச் செவ்வனேயுணர்ந்து போற்றுதல் ஒவ்வொரு நாட்டாருடைய இன்றியமையாத முதற்கடனாம். அதுவும் நமது நாடு முன்னாட்களில் எவ்வளவு உயர்ந்திருந்ததோ, இதுபோது அதனினும் மிக்க தாழ்வான நிலையிலிருத்தலால் இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் உழவு, கைத்தொழில், வாணிபத்தின் பெருமையை தங்கள் கூறிய அறிவால் நுணுகி ஆராய்ந்து அவை முன்னேற்றமடையக்கூடிய துறைகளை தத்தம் அறிவாற்றலுக்கியையக் கொண்டு செலுத்துதல் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெருநன்மைக்கும் காரணமாகும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது, தள்ளினும் தள்ளாமை நீர்த்து." என்னும் அருமைத்திருவாக்கின்படி நம்முடைய எண்ணங்களும் செயல்களும் மேன்மையுடையனவாகுக. நம் முயற்சிக்குத்தக்க பலன் இருந்தே தீரும். அதில் யாதும் ஐயமில்லை. உழவு, கைத்தொழில் வாணிகம், ஆகிய துறைகளில் நிகரற்ற அறிவும அநுபவமும் வாய்ந்து, நமக்கு உதவியாளர்களாக

வுள்ள. பிறநாட்டாரிடம் நாம் நன்கு மதிப்பும் அன்பும் காட்டி, அவரை யொட்டியும் நம் பெருமைகளை முற்படுத்த முயலவேண்டும்.

அஃதின்றி அரசாங்கத்தாரை எவ்வகையானும் எதிர்த்தால் நமக்கு நாமே கேடு சூழ்ந்தவர்களாவோம். அப்படிப் பிறநாட்டாராலேயே நாம் கெட்டதாக ஏற்றுக்கொண்டாலும், நமது நாயனார் அருள்வாக்கை நினைவு கூர்ந்து, "இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்," என்பதற்கிணங்க நாம் அன்பினால்தான் மற்றவர்களை வெல்லவேண்டுமே யல்லது, பிற எந்த வகையானும் எதிர்த்தல் நமது சிறுமைக்கே ஏதுவாகும். நாம் மற்றவர்களை வெல்லவேண்டுமானால் அன்பு என்னுங் கருவி கொண்டன்றிப் பிற எவ்வகையானும் முடியாதென்பது, "வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால் கல்லும் பிளந்து கடுவெளியாமே," என்னும் பெரியார் வாக்கை நம்மவர் ஒவ்வொருவரும் இடையறாது நினைவுகூர்ந்து நடந்துவருவராயின்நம்மால் வெல்லமுடியாத பொருள் உலகில் வேறொன்றுமில்லை என்பது திண்ணம்

உலகியலறியாத நம்மவர்கள் சிலரிடத்து பிறநாட்டாரெல்லாம் நாகரிகமற்றவர் என்னும் எண்ணம் சிலநாட்களாக நிலவிவருவதாயினும், அவர்கள் இதுபோது உலகியல் அறிவெல்லாம் அவர்களிடத்தே திரும்ப நாம் பெறவேண்டியிருத்தலால் நம்முடைய முன்னேற்றத்தைக் கருதியாவது எக்காரணத்தை முன்னிட்டும் அவர்கள் பகையை நாடாது அவர்கள் அன்பையே நாடினால் தான் நாம் எண்ணியதை மிகவும் எளிதில் பெறக்கூடும்.

இத்தகைய ஆழ்ந்த அறிவும் விரிந்த நோக்கமும் நமது நாட்டின் பற்றும் நாம் மேற்கொண்டு நடந்து காட்டி 'உடைய ரெனப்படுவதூக்கம் அஃதிலார் உடையது உடையரோ மற்று,' 'ஆக்கமிழந்தேமென் றல்லாவார் ஊக்கமொரு வந்தம் கைத்துடையார்' என்று நமது நாயனார் அருளியாங்கு ஊக்கத்துடன் முயற்சிப்போமாயின் சென்றதைப்பற்றி எண்ணி எண்ணித் துயருற வேண்டியதில்லை. ஆகவே, நம்மவர்களெல்லாம் இனியுடனே காலந்தாழ்க்காது, நாளை, நாளை என்று கூறாது, தளராதுஉறுதியுடன் முன்னின்று நல்லறிஞர்கள் வழிகாட்ட நாம் முயன்றுவருவோமாயின் யாவரும் அவ்வழியையே பின்பற்றி நல்வாழ்வு பெறுவர் என்பது திண்ணம்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப
எண்ணியார், திண்ணியராகப் பெறின்"

ஆதலால், பெரியோர்களே, நாமும் நமது நாடும், நமது நோக்கத்தைப் பரவச்செய்யும் வணிகர்களும் சிறப்புற்று ஓங்கி நமக்கு எல்லா நலத்தையும் நல்குவதாகவென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

எறிபத்த நாயனார் புராணத்தின் தத்துவார்த்தம்.

(372- ஆம் பக்கத் தொடர்ச்சி)

27. அரசன் அன்புமயமாய் அரசு செலுத்துவது திரோதானசத்தி அருண்மயமாய் மலங்களைச் செலுத்துவ தாகுமெனல்.

இவ்வாறு அரசனும் எறிபத்த நாயனாரும் திருவருட் செயலைக் கண்டு திருவருளை வாழ்த்தியபின், அரசனதடிகளில் வணங்கிய யானை பாகர் பரிக்காரர்களைக்கண்ட எறிபத்தநாயனார், அரசனை யானைமீதேறிச்சென்று தனதரசாட்சியை நடத்தும்படிப் பிரார்த்திக்க, அரசனும் எறிபத்தநாயனாரை வணங்கி அவரது ஆணைக்கு அஞ்சி, அவ்வாறே யானைமீதேறிச்சென்று, அன்புமயமாய்த் தனது அரசாட்சியைச் செலுத்துவதானது,

இவ்வாறு திரோதான சக்தியும் ஞானாசாரியரும்திருவருளாணையெனக்கண்டு திருவருளை வாழ்த்தியபின் திரோதான சத்தியாகிய அருட்சத்தியின் பாதத்தில் அடங்கிய ஆணவம் கன்மம் மாயை மாயேயங்களைக்கண்ட ஞானாசாரியர், திரோதான சத்தியாகிய அருட்சத்தியை நோக்கி ஆணவத்தைச் செலுத்தித் தனது ஆட்சியை நடத்தும்படிப் பிரார்த்திக்க, அருட்சத்தியும் சிவபிரானின் வேறாகாத ஞானாசாரியரை வணங்கி, அவருடைய ஆணைக்கு அஞ்சி, ஆணவத்தைச்செலுத்தி அருண்மயமாய்த் தனது ஆட்சியை நடத்துவதாகும்.

"ஆனசீர்த் தொண்டர் கும்பிட் டடியனேன் களிப்ப விந்த
மானவெங் களிற்றை யேறி மகிழ்ந்தெழுந் தருளு மென்ன
மேன்மையப் பணிமேற்கொண்டு வணங்கிவெண் குடையினீழல்
யானைமேல் கொண்டு சென்றா ரிவுளிமேல் கொண்டு வந்தார்.

எறி-புரா-52.

அங்கிலை யெழுந்த சேனை யார்கலி யேழு மொன்றாய்
மன்னிய வொலிய ளார்ப்ப மண்ணெலா மகிழ்ந்து வாழ்த்தப்
பொன்னெடும் பொதுவி லாட னீடிய புனிதர் பொற்றாள்
சென்னியிற் கொண்டு சென்னி திருவளர் கோயில் புக்கான்.

ஷ 53.

28. சிவகாமியாண்டார் தமதாயுள் பரியந்தம் சிவபணியை
யியற்றிச் சிவனடியாராக விளங்கினூரென்பது
சீவனூனது தனது தேகாந்தம் வரையில் தியானபரனூ
யிருந்தே சீவன்முத்தனூய் விளங்கிய தாகுமெனல்.

ஏறிபத்த நாயனூர் வாயிலாகத் தம்மை ஆட்கொண்டு, தமக்குச் சிவபிரான் அநுக்கிரகித்த முறைமையைச் சிவகாமியாண்டார் கண்டு, ஆனந்த பரவசராய்த் தமது கடமையிற் றவிராது, வழக்கத்தைப் போலவே சிவபணி விடையைத் தமது தேகாந்தம் வரையில் இயற்றிச் சிவனடியாராக விளங்கினூரென்பது, ஞானுசாரியர் வாயிலாகத் தன்னை ஆட்கொண்டு, தனக்குச் சிவபிரான் அநுக்கிரகித்த முறைமையைச் சீவனூனது கண்டு, ஆனந்த பரவசனூய்த் தனது கடமையிற் றவிராது தனது தேகாந்தம் வரையில் தியானபரனூயிருந்தே சீவன்முத்தனூய் விளங்கியதாகும்.

குறிப்பு:—சிவனடியாருக்குத் தேகாந்தத்தில் சிவபதம் சித்திப்பது கூறுமலே அமைவதைப்போல, சீவன்முத்தனுக்குத் தேகநீக்கத்தில், சிவபாஞ்சுடரிடத்தில் இரண்டறக்கலந்து சிவானந்தத்தை மட்டும் அநுபவித்திருத்தலாகும் சித்தாந்த முத்தியாகிய பரமுத்தி சித்திப்பது கூறுமலே அமையும்.

"தம்பிரான் பணிமேற் கொண்டு சிவகாமியாருஞ் சார"

ஏறி - புரா - 54.

"பரஞானத்தாற் பரத்தைத் தெரிசித்தார் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சிய வாசக ஞானம் வைந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போக ஞாதிரு ஞான ஞேயந்
தங்கிய ஞானஞ் சங் கற்பனை ஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்த சிவஞான
மாதலாற் சீவன் முத்தர் சிவமேகண் டிருப்பர்.

சி - ஞா - சி - சுபக்கம். 11-ம் சூ - 2.

செம்பிரதக் குளிகையினூற் களிம்பற்றுப் பொன்னூய்ச்
செம்பொனூடன் சேருமலஞ் சிதைந்தாற் சிவ
னம்பனூடன் கூடுமெனிற் பொன்போ லல்ல
னற்குளிகை போலவர னணுகுமலம் போக்கி
யம்பொனடிக் கீழ்வைப்ப னருங்களங்க மறுக்கு
மக்குளிகை தானூம் பொன்னூகா தாகு

மும்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய
னுயிர்தானுஞ் சிவானுபவ மோன்றினுக்கு ழரித்தே.
ஷை - 10.

இரும்பைக் காந்தம் வலித்தாற்போ லிசைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத் தானுக்கி
யரும்பிந் தனத்தை யனலழிப்பது போன் மலத்தை
யழித்தமல னப்பணைந்த வுப்பேபோ லணைந்து
விரும்பிப் பொன்னினைக் குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேலளித்துத் தானெல்லாம் வேதிப்பானுகிக்
கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியை யொத்திருப்ப னந்த முத்தியினிற் கலந்தே.
ஷை - 12.

தனக்கமைத்த நாண்முழுதுந் தான்புரியும் படைப்பியற்றி
மனக்கினிய பெருமானு ருபதேச மறவானுய்ச்
சினக்கடுமை முதலொழிந்த சீவன்முத்த னுயீற்றிற்
கனக்கருங்கண் டனைக்கூடிப் பரமுத்தனுய்க் களித்தான்
திருப்பெருந்துறைப் புராணம்

அருளினெமை யுந்தனையு மறிங்கவுயிர் கதிரொடுகண்
ணணைந்தாற் போலத்
தெருளினெம துள்ளடங்கி யானந்த மொன்றுமே
தினையா நிற்கு
மருளில்யான் முதலென்ற லருளின்யான் முதலென்றன்
மாறி மாருப்
பொருளினருண் முதலென்ற லதிலழுந்த றவிர்ந்தெம்மைப்
புணர்தன் முத்தி. திருப்பெருந்துறைப் புராணம் 67.

மூன்னமே யழிந்தது சஞ் சிதமேறு வினையுளதேன்
முற்ருதாகுஞ்
சொன்னவா றருளினுன் வாதனைமெய் யியங்களவுந்
தோன்ரு நிற்கு
மன்னதுமஞ் செழுத்தைவிதிப் படிகணிக்கப் போநமையா
லயமுன் மூன்றிற்
பின்னமற வழிபடுதல் சீவன்முத்தி பரமுத்திப்
பேறு மீண்டே. ஷை 68.

29 எறிபத்த நாயனூர் சிவகணத் தலைவரானது ஞானசாரியர் சிவனடித் தொண்டை விரும்பிய சீவர்களுக்குத் தலைவரான தாகுமெனல்.

எறிபத்த நாயனூர் இவ்வாறே சிவனடியாருக் குதவிசெய்து கொண்டிருந்து, சிவாக்கினையாலே சிவகணங்களுக்கு முதற் பெருந் தலைவரானு ரென்பது, ஞானசாரியர், இவ்வாறு சிவனடித் தொண்டை விரும்பிய பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகித்துக் கொண்டிருந்து சிவாக்கினையினலே சிவதாகமுள்ள சீவர்களுக்குத் தலைவராய் விளங்கினு ரென்பதாம்.

"எம்பிரா னன்பரான வெறிபத்தர் தாமு மென்னே
யம்பல நிறைந்தார் தொண்ட ரறிவதற் கரியா ரென்று
செம்பியன் பெருமை யுன்னித் திருப்பணி நோக்கிச் சென்றூர்.
எறி - புரா - 54

மற்றவ ரினைய தான வன்பெருந் தொண்டு மண்மே
லுற்றிடத் தடியார் முன்சென் றுதவியே நாளு நாளு
நற்றவக் கொள்கை தாங்கி நலமிகு கயிலை வெற்பிற்
கொற்றவர் கணத்தின் முன்னுங் கோமுதற் றலைமை பெற்றூர்"
எறி—புரா - 55

"அன்பு மிகவுண்டாய் அதிலேவி வேகமுண்டாய்த்
துன்ப வினையைத் துடைப்பதுண்டா—யின்பந்
தரும்பூ ரணத்துக்கே தாகமுண்டா யோடி
வருங்கா ரணர்க்குண்மை வை."
சிவபோகசாரம்.

எறிபத்த நாயனூர் புராணத்தின்
தத்துவார்த்தம் முற்றும்.

வாலையானந்தம்.

மொழிவழி யொழுகு மன்பர் முன்புறு கருப்பை யுந்திச்
சுழிவழி யிழியா வண்ணந் துணைப்பத மிதவை நல்கி
விழிவழி யருளி னேற்று மெய்கண்ட சந்தா னத்து
வழிவழி வருவோர் காமர் சேவடி வணங்கி வாழ்வாம்.

ஓம்தத்ஸத்.

பஞ்சாக்ஷாபுரம், வாலையானந்தம்.

உ

சிவமயம்.

எறிபத்தநாயனுர் புராண தத்துவார்த்தத்தின் தாற்பரியம்.

மாதாவின் கருப்பத்தில் உற்பத்தியானமை பற்றிக் கருப்பபுரியெனச் சிறப்புப் பெயர்பெற்ற சரீரத்தில், சீவர்களுக்குரிய கேவல சகல சுத்தாவத்தைகளில், சீவர்கள் கருவிகளை நீங்கிய கேவலாவத்தையையும், கருவிகளின் வயப்படாத சுத்தாவத்தையையும் நீக்கி கருவிகளோடு கூடிய சாக்கிராவத்தைக்குரிய ஆனிலே யென்னும் லலாடத் தானத்திலே சிவன் நின்று, தன்னிடத்திற் சேர்ந்த சீவர்களை சனன மரணங்களாகிய சம்சாரமார்க்கத்தில் மீளவிடாதிருக்கும் சிவலோகமெனப் பெயரிய பசுபதியை, சிவத்தைக் காமுற்றதும், சிவத்தால் அநாதி முதலே உபகரிக்கப் பெற்றதுமான சிவகாமி யாண்டாரெனும் சீவனுனது திண்ணிய அன்புகூர்ந்து, ஞானேந்திரிய கன்மேந்திரியங்களின் பற்றில்லாததும் அஹிம்சாதி எண்வகைகளான ஞானமயமாகின்ற அட்டபுட்பங்களைத் தன்னிடத்தே கொண்டதும், கிரந்திகளையுடைய வீணுதண்டினூடே வரும் சுழுமுனுநாடியை ஆதாரமாகக்கொண்டதும் மற்றோர் பற்றில்லாததுமான மனதையுடையதாய்த் தியானித்தது.

அங்ஙனம் தியானிக்கும்போது எவ்வாறு தியானித்ததெனில், பரஞ்சுடராகிய சிவபெருமானைத் தொடராகத் தொடருதற்குச் சிந்தை தெளியும்படி அன்பாகிய நாரில் மனமாகிய கரத்தால் அஹிம்சாதி புட்பங்களைப் புடையாக வைத்து அஞ்செழுத்தாகிய மலர்களைத் தொடுத்து அன்பிற் பிணிப்புறும் வண்ணம் சிவபிரானுக்குச் சாத்தித் தியானித்தது.

அவ்வாறு தியானிக்கும்போது, இருவினைகளாகிய பாகராற் செலுத்தப்பட்டு, மூன்று மாயைகளாகிய பரிக்காரர்களைச் சூழக் கொண்டு, திரோதான சத்தியாகிய அரசனது ஆணையினடக்கும் ஆணவமாகின்ற யானையானது காலகதியினாலே களிமயக்கால் மேலிட்டு, சிவபிரானைத் தியானிக்கும் சீவனது மனதைப் பறித்து (அலைத்து என்றபடி) அதிலுள்ள அருண்மயமான அஹிம்சாதி புட்பங்களைச் சிதறடித்தது.

அதனை யறிந்த சீவனுனது ஆணவத்தை படக்க முயற்சித்தும் ஆணவமானது மேலிட்டுத் தன்வசப்படாது போக, சீவன் தனது செயலின்மையாற் றளர்ந்து நின்று, ஆணவத்தின் வலியை அழித்துத் தனக்குச் சுகத்தைக் கொடுக்கும்படிச் சிவபிரானைப் பிரார்த்தித்து இரங்கியது.

அப்போது, ஞானேந்திரிய கன்மேந்திரியங்களைத் துறந்தவரும் அநாதிபற்றாகவுள்ள ஆணவமாயா கன்மங்களாகிய பற்றுக்களையும் அவை காரணமாக வருகின்ற பொருட்சார்பு உயிர்ச்சார்புகளாகிய பற்றுக்களையும் நீத்தவரும், அதனால் எறிபத்தர் (எறிபற்றர் அல்லது எறிபத்தர்) எனக் காரணப்பெயர் பெற்றவருமாகிய ஞானாசாரியர், பாசங்களைச் சேதிக்கு மாற்றலுடையதான கர்த்தரியெனும் பெயரோடு கூடிய ஞானசத்தியாகிய வாளையுடையவராய் வந்து, பக்குவத்தில் உதவுந் தன்மையராதலாலே சீவன் இரங்குதலை அறிந்த அவர், தமது கருணையினாலே சீவனின் வலியைக் கடந்த ஆணவத்தைத் தடியும்பொருட்டுத் தாமாகவே சரீரம் கம்பிக்கும்படி யோகநெறியால் மேலிட்டு நித்தமாகிய ஆணவத்தினது மறைக்குஞ் சத்தியை அறுத்து வினைகளையும் மாயை மாயேயங்களையும் அழித்து, சீவனுடைய துன்பத்தைக் களைந்து நின்றார்.

திரோதான சத்தியானது தனது ஆட்சிக்கு முக்கிய அங்கங்களான ஆணவம்முதலியவைகள் அழிக்கப்பட்டதை அறிந்து, ஆவடுதுறையாகிய சுழுமுனையை அடைந்து, அவ்விடத்தில் ஆணவம் முதலியவைகளை அழித்தவர் சிவபிரானின் வேறாகாத ஞானாசாரியரென அறிந்து, அவரைச் சிவபிரானெனவே கண்டு, மலங்களை அழித்ததானது அவருடைய அருட் செயலாகுமெனத் துணிந்து, அவ்வாசாரியரை யணுகி மலங்களின் கொடிய செயல்களுக்குத் தானுங்காரணமாய் இருத்தலால் தன்னையும் அழிக்கும்படிப் பிரார்த்தித்தது.

அப்போது ஞானாசாரியர் தமக்கெதிரே தோன்றுவது திரோதான சத்தியென்றறிந்து, தமக்கனன்னியமாயுள்ள சிவபிரான தாணையைச் செலுத்துகின்ற திரோதான சத்தியானது வருந்தும்படி நேர்ந்ததைப்பற்றித் தாமும் வருந்தித், தம்மைத் துறக்கக் கருதினார். அவரது நிலையையும் அருட்டிறத்தையும் கண்ட திரோதான சத்தியானது தனதருள் வலியால் ஞானாசாரியரைத் தடுத்தது.

அச்சமயத்தில் சீவர்களது அன்புத்திறத்தையும் அவர்களையாட்கொள்ளும் முறைமையையும் உலகறியச் செய்யவே இவ்வாறு நிகழ்ந்ததென்று திருவருளா லுணரப்பெற்று இருவரும் திருவருளைப் புகழ்ந்தார்கள்.

உடனே சீவனுடைய மனதில் உத்தம தெய்வீகமான அஹிம்சாதி அருண்மய புட்பங்கள் நிறையப் பெற்றதையும், ஆணவம் கன்மம் மாயை மாயேயங்கள், முன்னே தங்களுக்கிருந்த மறைக்குந் தன்மை கெட்டுப் பிரகாச முடையனவாகி, அருண்மயமாய் மாறியதையும், சீவன் அருண்மயமாய்ப் பரவசப்பட்டதையும் அவ்விருவரும் கண்டார்கள்.

இவ்வாறு திரோதான சத்தியும் ஞானாசாரியரும் திருவருளாணையென அவைகளைக் கண்டு திருவருளை வாழ்த்தியபின், திரோதான சத்தியாகிய அருட் சத்தியின் பாதத்தில் அடங்கிய ஆணவாதிகளைக் கண்ட ஞானாசாரியர், அவ்வருட் சத்தியை நோக்கி ஆணவாதிகளைச் செலுத்தித் தனது அருளாட்சியை நடத்தும் படிப் பிரார்த்திக்க, அருட்சத்தியும் சிவபிரானின் வேறாகாத ஞானாசாரியரை வணங்கி அவரது ஆணைக்கு அஞ்சி ஆணவத்தைச் செலுத்தித் தனது அருளாட்சியை நடத்தியது.

சீவனனது சிவபிரான் ஞானாசாரியர் வாயிலாகத் தனக்கநுக்கிரகித்த முறைமையைக்கண்டு ஆனந்த பரவசனாய்த் தனது கடமையிற் றவிராது தனது தேகாந்தம்வரையில் தியான பரனாயிருந்தே சீவன்முத்தனாய் விளங்கியது.

குறிப்பு:— சீவன்முத்தனுக்குத் தேக நீக்கத்தில் சிவபரஞ்சுடரிடத்தில் இரண்டறக் கலந்து சிவானந்தத்தை மட்டும் அநுபவித்திருத்தலாகும் சித்தாந்த முத்தியாகிய பரமுத்தி சித்திப்பது கூறாமலே அமையும்.

ஞானசிரியரும் இவ்வாறே சிவனடித் தொண்டை விரும்பிய பக்குவான்மாக்களுக்கு அநுக்கிரகித்துக் கொண்டிருந்து சிவாக்கினையினாலே சிவதாகமுள்ள சீவர்களுக்குத் தலைவராய் விளங்கிக் கொண்டிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

எறிபத்த நாயனார் புராண
தத்துவார்த்தத்தின் சூற்பரியம்

முற்றிற்று.

பஞ்சாட்சரபுரம், வாலையானந்தம்.

உ

திருமுருகன் திருவடியே துணை.

அமிர்தஞ் சுந்தரநாதனர் இயற்றிய

"நுண்பொருள் நூறு."

பாயிரம்.

பொருள் வணக்கம்.

உலகெலா மாக்கி யொளிர்வித் தவற்றை
இலகத் தன்னு ளெய்தக் காக்கும்
அலகிலா விளையாட் டுடையா னெவனே
குலவுறு மன்னேன் குறிக்கு முதல்வன்
நிலவிய வவன்றா ணெஞ்சில்
நலனுற நாட்டுவம் நவில்வினை செலவே. க.

விநாயகர் வணக்கம்.

பொன்னம் பலவன் பொற்புறு புதல்வன்
மன்னிய யானை மாண்பெரு முகத்தன்
துன்னிய வடியார் துயர்களைந் திடுவோன்
பன்னருஞ் சேவடி பரவுதும்
முன்னிய யாவும் முற்றுறத் தாமே. உ.

முருகப்பிரான் வணக்கம்.

எண்ணுய ராழியி னண்ணி யெழுந்த
பண்ணுயர் கதிரெனத் திண்ணிய மஞ்ஞையில்
விண்டொழ வெழுந்த வண்ணல் முருகன்
தண்டமிழ் முதல்வன் றொண்டர்க் கருள்வோன்
கண்ணிய கான்மல ருண்ணிலை
கொண்டிட வைப்பிற் கொண்டிடு மின்பே. ௩.

மலைமகள் வணக்கம்.

ஓங்கு மிறைவ னுயரிடம் பெற்ற
மாங்குயின் மொழியாள் மலரடி தொழவே
நீங்குந் துன்ப நீர்மையின்
ஆங்கெழு இன்பெலா மமைந்திடத் தானே. ௪

திருத்தேவர் தேவிகள் வணக்கம்.

காலை மாலை வேலைபாக் கொண்டு
கார்நிற மாலையுஞ் சேர்தரு திருவையும்
அன்ன வூர்தி மன்னிய தேவையும்
வெள்ளிதட் பூவுறை தெள்ளுநா வணங்கையும்
நல்ல தொண்டின் வல்லோர்
பலரையும் வணங்குவாம் நலம்பெறற் பொருட்டே. ௫.

தந்தையார் வணக்கம்.

தந்தையாய்த் தாயாய்த் தனிப்பெருங் குருவாய்
முந்துற வந்து முத்தமிழ் தந்து
சிந்தையி லினிக்கச் சிவப்பயிர் விளைத்து
வந்துநன் ஞானம் உவந்தருள் செய்த
எந்தை அமிர்தம் எங்கோன்
பைந்தாண் மலரடி பரவுமென் னெஞ்சே. சு.

நூல்.

முதற் பத்து
கடவுளுண்மை.

புவிமுத லுலகெலாம் புகலு மைந்தின்
செவிதரு சேர்க்கையின் றிறனென மொழிப
ஆக்குவோ னின்றி யாமோ வெதுவும்
நீக்கமி லிதுவும் நீளிறை யாட்டே
படைத்துப் போற்றித் துடைத்திடும் மொருவனை
உடைத்தே யுலகம்! உடைத்தே யுலகம்!
குழிசி கண்டோன் குயவனைக் காண்பன்
பழியி லுலகம் பார்ப்பவர் பார்ப்பர்
முதல்வ னுண்மை முறையி னீங்கே
உதவுகண் ணொளிபெறு ரோங்குசெங் கதிரையுங்
காண்ப தரிதே! காண்ப தரிதே!
மாண்டமுன் னுளுற்றிலா மாசிது வாமால்
இவர்தாம்,
காணு மையினுற் கதிரோ னிலனே?
வாணு ளழிய மண்மிசைத் திரிசிலர்
இறைவனைக் காணுர் எண்ணிற்
குறைபெரி தம்மா கூறிடி னிவர்க்கே. க.

அன்பு செய்வார்க்கு ஆம்பயன்.

நாடிய கைவரும் நன்மை யெய்தும்
இன்மை யில்லை யின்ப முண்டால்
புகழே பெருகும் பொருந்துநன் னீணுள்
வினைமா சகலும் வெம்மை யோடும்
பிறவித் துயரறும் பேண்டிரு வுறுமே
அரனை நினைந்தவ னடியிணை
உளனிடை வைத்த வுரவோர் தமக்கே. உ.

அ. சுந்தரநாதன்.

அரும் பொருள் விளக்கம்.

(390-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

எச்சங்கத்தாரும் மெச்சும் புலமை நந்தலிலா நல்லிசைப்புலவர் குழாங்கூடி நச்சும் பெருமை முச்சங்கமிருந்து கறைமிடற்றடக்கிய கண்ணுதலருளிய கவின்பெரு மூவாமருந்தாஞ் செந்தமிழாராய்ந்த காலந்தொட்டு பற்பல தமிழ் நூலினுள்ளும் உரையினுள்ளும் "உள்ளங்கை நெல்லிக்கனிபோல" என ஓர் பழமொழி வழங்கிவருகின்றது. பலவாசிரியர்களை இப்பழமொழிக்கு உண்மைப் பொருள் என்னென வினவின் அன்னோர்.

ஐயமறவிளங்கும் உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனியைப்போல எனச் சிறிது விரித்துக் கூறுவர். அற்றேல், உள்ளங்கை மாங்கனி போல, தேங்கனிபோல, களங்கனிபோல, விளங்கனிபோல எனப் பிற கனிகளைக் கூறாது இந்நெல்லிக்கனி ஒன்றனைக் கூறவேண்டிய தென்னைபோவெனின் நெல்லிக்கனியினுள்ளுள்ள வரிகள் கொட்டை முதலியன மிகத் தெளிவாக விளங்குகின்றன, மாங்கனி முதலியன அப்படி விளங்குந்தன்மை அன்றென்பர். இன்னுமவர்களைத் திராட்சைப் பழத்தினை உள்ளங்கையில் வைத்துப் பார்த்தால் அதன் உள்ளும் புறமும் நெல்லிக்கனியைவிட மிக விளக்கமாகத் தோன்றுகின்றதேயெனின் அது நம் நாட்டுப் பழமன்று. வேறு நாட்டிலிருந்து வந்தது, அதனாலன்றோ அதற்குத் தீப திராட்சையெனப் பெயரும் வழங்குகிறது எனக் கூறுகின்றனர். அற்றேல், நம் நாட்டுத் தக்காளிப்பழத்திற்கு என் சொல்வீர்? எனின் ஒன்றுங் கூறாது நெல்லிக்கனி, நெல்லிக்கனி என்று தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்பர்,

அற்றாயின், ஈண்டு வரையப் புகுந்தது எற்றுக்கெனின் இந்நெல்லிக்கனி இக்காலத்தில் நாம் உண்ணும் நெல்லிக்கனி அன்று எனற்கே; மற்றென்னையோ வெனிற் கூறுதும்,

*"வளம்படு வாய்வா ளேந்தி யோன்னூர்
களம்படக் கடந்த கழல்தோடித் தடக்கை
ஆர்கலி நறவின் அதியர் கோமான்"

(புறநானூறு கூகூ-ம் செய்யுள்)

எனச்சீரோங்கிய அதியமா னென்னும் வள்ளல், ஒரு முனிவர் கஞ்சமலையிலிருந்து பெற்றுத் தனக்குச் சாதல் நீங்கக்கொடுத்த கருநெல்லிக்கனியை ஔவைப்பிராட்டியாரை முகமும் அகமும் மலர இன்னுரைகூறி உண்ணும்படிச் செய்தான். இதனை,

* "வலம்படு" எனவும் பாடமுண்டு

மால்வரைக்"
கவின்பூஞ் சாரற் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
உரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவேல்
அரவக் கடற்றானை யதிகனும்"

என்றும். (சிறுபாணாற்றுப்படை, அடி 99. 103.)

"இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

என்னுந் திருக்குறளுரையிற் "பரிமேலழகியார்" "இனியகனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக் கனிபோல் அமிழ்தாவன வற்றை" என்றும்

"துன்னுட னெடுநாட் டோமற விருக்கச்
செய்யுந் தெய்வத் திறத்த தாய
தூயநல் லமுதூர் சொல்வளக் கருமா
நெல்லியங் கனியை" (புலவராற்றுப்படை)

எனப் பிற்காலத்தவரும் கூறியதனாலும் அறிக.

"பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே."
(புறநானூறு 91-ம் செய்யுள்)

என ஔவைப்பிராட்டியுங் கூறிவலியுறுத்தினர் ஆகலின், இந்நெல்லிக்கனி கருநெல்லிக்கனி யெனத்தெளிக. இதனை எவர்கள் தமது உள்ளங்கையில் வைத்திருந்தாலும் இது அவர்களுக்கு அவர்களின்முக்காலச்செய்தியை உணர்த்துவதோடு உண்டவர்களுக்கு நரை திரை மூப்பின்றி நீண்டகால வாழ்க்கையை அளிக்கவல்லது. இதனை மேற்கூறிய பரிமேலழகர் உரையில் அமிழ் தாவனவற்றை என்றதனால் உணர்க. இதுபோன்ற கருநெல்லிக்கனியைத்தான் அதியமான் என்னும் வள்ளல் நம் ஔவைப்பிராட்டிக்கீந்து அவராற் பாடப்பெற்றான். ஔவைப்பிராட்டியும் நீண்டகால வாழ்வெய்தியிருந்தனர். ஆகலின்,

"உள்ளங்கை நெல்லிக் கனியைப்போல" என்ற பழமொழிக்குப் பொருள்:—

"உள்ளங்கையிலிருந்தால் முக்காலச்செய்தியை உணர்த்தக்கூடியதும் உண்டால் நரை திரை மூப்பின்றி நீண்ட காலவாழ்வையளிக்கக் கூடியதுமாகிய ஔவைப்பிராட்டி உண்டதுபோன்ற கருநெல்லிக்கனியைப்போல" என உணர்க. இதன் உண்மை சித்தர் நூல்களில் "கருநெல்லிக்கனி"யின் பெருமைகூறுமிடத்துப் பரக்கக்காணலாம்.

ஆ. தங்காம் பிள்ளை,
அமைச்சர், திருநெறித்தமிழ்க்கழகம், திரிசிரபுரம்.

குரவர் மாணவர் குறிப்பு.

(356-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

குரவர்களே, தூயதமிழ் மொழியில் எழுதுவது தமிழ்மக்களின் கடமை. அங்ஙனஞ் செய்யாமல் பலமொழிச் சொற்களைக்கலந்து பேசுதலும் வரைதலும் வழக்கமாய்விட்டது. இதனை மணிப்பிரவாள மென்பர். மணிகள் பலவுள. அவற்றில் சிறந்தன ஒன்பதாம். அவை செவப்பு, வைரம், வைடூரியம், பச்சை, பவளம், முத்து, புட்பராகம், (பூகை), நீலம், கோமேதகம், (ஆதகை) என்பனவாம். இவை கலந்துவரின் பன்னிறம் காட்டும், பிரவாளம்பவளம். பளப்பளப்பான கற்களுடன் பவளமுங் கலந்துவரின் அது மணிப்பிரவாளமெனப்படும். ஒரு தொழிற்சாலையில் பலமொழி பேசுநர் கூடின் அவர்கள் பேச்சில் பலமொழிச் சொற்களும் கலந்துவருதல் வியப்பாகாது. ஆங்கிலத்துடன் வேறு மொழிச்சொற்களைக் கலந்துவருவதற்கு பிஜியன் இங்கிலீஷ் என்றபெயர் வழங்கும் தமிழ்மக்கள் ஆங்கிலம் கற்றுப் பேசுங்கால் இருமொழிச் சொற்களையும் விரவிப் பேசுகின்றனர். "பிரதர், வீட்டில் இல் ஆமே. டாக்டரைப் பார்க்கவில்லையா. இப்போ ஆல் ரயிட்டானே. மேடிசின் கண்டினுவசாகக் கொடுத்து வரவேணும். இல்லையானல் பீவர் ரிலாப்ஸாய் விடும். அது ஆல்வேஸ் பாட். அட்டேண்டு பண்ணுங்கள்." தடித்த எழுத்துச் சொற்களனைத்தும் ஆங்கிலச் சொற்களே, ஏனைய தமிழாம். கலப்பில்லாமல் எழுதின் "உடன்பிறப்பே'வீட்டில் நோய் ஆமே. வைத்தியரைப் பார்க்கவில்லையா. இப்பொழுது முற்றிலுங் குணந்தானே. மருந்தைத் தொடுத்துக் கொடுத்துவரவேண்டும். இல்லையானல் காய்ச்சல் திரும்ப வந்துவிடும். அது எந்நாளும் கேடுதீ. பார்த்து வாருங்கள்" இவ்வாறு கலந்து பேசுதலால் தனி மொழிபேசும் வழக்கம் குறைந்துபோம். எக்காலமும் இக்கலவையே வழக்கில் வரும். பொதுவில் பேசப்புகும் பொழுது இக்குழம்பு படைக்கப்பெறின் பலரும் நகைப்பர். பல மொழியாளருடன் உரையாடும்பொழுது கலவை மொழி பயன்படும். ஒருமொழி தாய்மொழியாக இருக்குமிடத்தில் கலவைமொழி பதராகிருத்தல் சிறப்பாம். தமிழ்ச்சொற்களை ஆங்கிலச் சொற்களிடைப்பெய்து பேசுதலைப் பண்டிதர்கள் பழிக்கின்றனர். பண்டிதர்கள் தாமே இருமொழிச்சொற்களை நாள்தோறும் பேசிவருகின்றதை யுணர்வாரில்லை. பழக்கமே அதற்குக்காரணம். செந்தமிழும் ஆரியமுங் கலந்து பேசாத தமிழ்ப்புலவர் எவர், எங்கணுளர். அதனையேன் நகைக்கின்றிலர். தூயதமிழ்மொழியில் ஏன் பேசாமல் வரையாமல் காலம்போக்குகின்றனர். நாயனர்,

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை"

"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண் கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு"
"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்"
"குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு"
"அற்ற மறைக்கும் பெருமை, சிறுமைதான்
குற்றமே கூறி விடும்"

என்றுளர். நம் குற்றத்தை, குறைவை, வழுவை நாமே கண்ணுங் கவலையுமாக விருந்து நீக்கி யொழுகின் நலம். அஃதன்றிப் பிறர் எடுத்துரைக்குங்கால் வருத்தப்படாமல் ஒழிக்க முயலவேண்டும். குரவர் மாணவர் வடுக்களை எடுத்துக்காட்டி அறவே நீக்குவித்தல் கடமை. அதுபற்றியே பின்வருவன வற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்க.

நண்பர்களுக்கு எழுத்துப்போக்குச் செய்வதில் தனிமொழிச் சொற்கள் வழங்க முயலவேண்டும். "பிரியமுள்ள கனிஷ்ட சகோதாரே, உம் நிருபம் கிடைத்தது பிதா, மாதா, சகோதரி, என் புத்திரர், புத்திரிகள், பௌத்திரர், பௌத்திரிகள், யாபேரும் சவுக்கியம். உமக்கு உத்தியோகம் நடந்து வருகிறதா? சொல்ப ஜீவனமானாலும் யோக்கியதையாயிருக்க வேணும். கீர்த்தியும் திரவியமும் பூலோக ஜீவிதத்திற்குச் சிரேஷ்டமானாலும் யோக்யதை இல்லாவிட்டால் நஷ்ட கஷ்டம் வரும்"

மேலே தந்துள்ள தொடரில் கறுத்த எழுத்திலுள்ள சொற்கள் வடமொழிச்சொற்களே. இன்றியமையாத விடங்களில் வடமொழிச் சொற்களை யமைத்தல் அழகாகும். அஃதன்றித் தமிழ்ச்சொற்களை மறந்து அன்னிய சொற்களைப் பெய்தல் இழுக்காம்.

"அருமைத்தம்பியே, உம் எழுத்துக் கிடைத்தது. தந்தை, தாய், தங்கை, தமக்கை, என் மக்கள் (ஆண் பெண்), பேரர், பேத்திகள், யாவரும் நலமுடையர். உமக்கு வேலை நடந்து வருகிறதா? சிறுவாழ் வெனினும் நன்னடை வேண்டும். புகழும் பொருளும் உலகவாழ்விற்குச் சிறப்பானாலும் நன்னடையில்லாவிட்டால் கேடுந் துயரும் வரும்."

ஒருவருக்கொருவர் வரைந்தனுப்பும் எழுத்தில் மிகுந்த வட சொற்கள் வரின், வடமொழிபயின்ற விரிவுரையாளர்கள் தாமெழுதும் உரைகளில் வடசொற்கள் வழங்குவது வியப்பன்றே. நால்மறை நாலாயிரச் செய்யுள் தொகுதியினை வெளியிட்ட பெரியார் தம்முன்னுரை, கருத்துரை, விரிவுரைகளில் மணிப்பிரவாள நடைமிகுந்து வருவதைக்காணலாம். மேற்குறித்த தொகுதியின் முகவுரையில் இத்தகைய தொடர் மலிந்துவருவதைப் பார்க்கலாம். "நீங்கள் போய் நாநாவர்ணங்களிலும் அவதரித்து எல்லா ஆத்மாக்களையும்

உத்தரிப்பியுங்கள், என்று நியமித்தருள, அவர்களும் தாம்பிரபர்ணி காவேரி முதலான நதிகளின் ஸமீபங்களான தமிழ்த்தேசங்களில் தாழ்ந்தாரை உயர்த்துகைக்காக நாநாவர்ணங்களில் வந்தவதரிக்க ஸர்வேஸ்வரனும் ஆழ்வார்களுக்கு மயர்வற மதிநலமருளி ஸர்வாதிகாரமான த்ராவிடவேதரூப திவ்யப்ரபந்தங்களை ப்ரகாசித்தருளினன்.''

இவ்ற்றைத் தனித்தமிழில் எழுத முயலுவம், ''நீங்கள் போய்ப் பற்பல (நிற) வகுப்புக்களிலும் தோன்றி (பிறந்து) எல்லா மன்னுயிர்களையும் தகைமைபெறச் செய்யுங்கள்'. என்று கட்டளையிட, அவர்களும் தாமிரவன்னி, (பொருநை), காவிரி (பொன்னி) முதலான ஆறுகளின் பக்கங்களான தமிழ்நாடுகளில் தாழ்ந்தவரை உயர்த்துவதற்காகப் பலபகுதிகளில் வந்துபிறக்க, எல்லாம்வல்ல இறைவன் ஆழ்வார்களுக்கு மயக்கமற அறிவுநல மருளி எல்லாம்வல்ல திருவிடமறையுருச் சிறந்த நூல்களைச்செய்து விளக்கினன்.'' (தொடரும்)

மூ. சி. பூர்ணலிங்கம்பிள்ளை, பி. ஏ. எல். டி.

திருச்சிராப்பள்ளி பிட்சாண்டார்கோயில் பெருநில உரிமையாளரும், சைவ நன் மக்களுக்கு ஓர் திலகமாயிருந்தவரும், வேளாண்மக்களுக்கு ஓர் வழிகாட்டியா யிருந்தவரும், தமிழ் நன் மக்களுக்கு ஓர் பேருபகாரியாயிருந்தவருமான திருவாளர் பி. சோ. ஆவுடையப்பப்பிள்ளை யவர்கள் இறைவன் திருவடி நீழலையடைந்தமையைக் கேட்டு ''தமிழர்'' தாள்ஆளர் பிரிவாற்றமையைத் தெரிவிக்கக் கூறியவை.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

கலங்காத மனம்படைத்தேன் ஆனாலும் உன்மரணங் காதாற் கேட்டு
நிலங்கோதுற் றுக்குழிய வீழ்ந்திட்டேன் கண்ணீரும் நிலத்து வீழ்ந்த
நலங்காணும் வடிவழகா! ஆவுடையாப் பிள்ளையெனும் நாகரீகா!
குலங்காணும் வேளாளா! குவலயத்தென் றேகாண்போங் கூறுவாயே.
நிறைந்தமதிக் கலையழகும் நிறைந்தகுண நடையழகும் நேயச்சைவம்
உறைந்தவுளச் சொல்லழகும் உயர்ஜோதிப் பல்லழகும் ஓங்கலொப்பா
அறைந்ததிரட் புயவழகும் அமைந்தோங்கும் ஆளழகா! அருமை நேயா!
மறைந்தெங்ஙன் ஆவுடையாப் பிள்ளைநீ அடைந்தாய்சொல் வந்து நின்றே.
நல்லறத்துக் கொருதுணையே! நற்கலைக்கோர் பெருவைப்பே! நாடுஞ் செய்ய
வல்லமைக்குச் சிம்புள்ளே! வடிவழகில் மயிலோனே! மதிக்குஞ்சைவச்
சொல்லமையக் குறியாளா! ஆவுடையாப் பிள்ளையெனுஞ் சுகுண வெற்பே!
புல்லினோநற் சிவலோகம் புலம்பினம்யாம் நின்பிரிவாற் புழுங்கி மாதோ.
மாக்காட்சித் திருவழகா! பிச்சாண்டார் கோயிலூர் மன்னா! எங்கள்
பாக்காட்சிச் சொக்கலிங்க வேண்மகனே! துரைமார்கள் பரவ வாசப்
பூக்காட்சி வளஞ்செய்த ஆவுடையாப் பிள்ளையெனும் புகழினனே!
கோக்காட்சிக் கைகலையது கூடினையே உனைநினைந்து குழைந்தோம் யாமே.

சென்னை அரசியல் வளர்ச்சித்துறைத் தமிழ் அமைச்சரும்,
தண் தமிழ் நாட்டின் தவப்பேறும் புதல்வரும்,
"தமிழர்" புரவலருமான உயர்திருவாளர் திவான் பகதூர்
தி. நே. சிவஞானம் பிள்ளை பி. ஏ, அவர்களுக்கு
"சர்" என்னும் பட்டம் கிடைத்தமை பற்றித்
"தமிழர்" தாள்ஆளர் கூறிய
வாழ்த்துப்பா.

நேரிசை யாசிரியப்பா.

பூமலி நாட்டுட் புகழ்நெல் வேலியில்
நாமலி புகழின் நலம்பெற வந்த
கோவே வாழி! கோவே வாழி!
பாவேர் நற்றிவான் பகதூர் மதிப்பும்
சார்பட் டம்முஞ் சாரப் பெற்ற
ஏர்திகழ் சைவ எழிலாய் வாழி!
கலைக்டர் வேலையைக் கருணையி னடாத்தி
நிலைத்த செல்வ! நிலத்து நீ வாழி!
ஜில்லா போர்டின் சீர்ப்பிர சிடெண்டா
நல்லார் மெச்ச நடுநிலை நின்று
எல்லார் தமக்கும் இனிமை செய்த
வல்லாய் வாழி! வல்லாய் வாழி!
நம்மவர் போற்றும் நயம்பெறு பொற்பின்
எம்மெல் சியெனும் ஏந்தால் வாழி!
கவர்னர் மெச்சுங் கவின்மந் திரியென
அவமறுத் தாளும் அன்ப வாழி!
செந்தூர் தன்னிற் சீரிய ரயில்வழி
வந்து சேர வளஞ்செய் தருளிய
கொந்தா ரலங்கற் குலப்பெரு மானே!
கந்தன் அருளாற் கதித்து வாழி!
தாளாண் சிறப்புடன் தனிக்குண மாண்புயர்
வேளாண் குலத்து வெற்பே வாழி!
நற்பெருங் கவர்னர் நாட வமைந்த
சொற்றமிழ் அமைச்சே! சுகத்தொடு வாழி!
எங்கள் தமிழா! இன்பக் கடலே!
துங்கக் குணனே! தூயாய்! வாழி!
கமழ்தமிழ்ச் சாவ் கலாசா லைக்கோர்
அமிழ்தென வந்த அணிதலை யாகும்
சீர்ச்சிவ ஞானச் செம்மலே!
பார்க்கண் இனிதுநீ பரவவா ழியவே!

திருச்சிராப்பள்ளி, குரோதன, தை, க. } ம. உ. க. பஞ்சரத்தினம், தாள் ஆளர், "தமிழர்."

கௌரிசங்கரன்

(389-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைப் பெருக்குவதன் காரணமாக, தனது நாயகியை மலடியெனத் தீர்மானித்துப் பின் பல பெண்களையாடவர் மணந்துகொள்ளுதல் நம் நாட்டு வழக்கு. பெண்களில் மாத்திரந்தான் மலடிகளுண்டோ? புருடரிலும் மலடருண்டென்பதை யான் சொல்லவேண்டுமா? ....:.புருடன் மலடன் எனத் தெரிந்துகொண்ட நங்கை நாயகனிருக்கவும் குழந்தையை நாடி வேறொருவனை மணந்து கொள்ளலாம் போலும்!

புருடருக்கு அன்பென்பதை கற்பித்தவரும் நந்தம் பெருநாடு வந்த பெண்மணிகளே. எத்தனை மணுட்டிகள் தம் மணளரோடு சககமனஞ்செய்தனர்! எந்தப் புருடன் தன் பத்தினியோடு உடன் கட்டை யேறினன்? புருடருயிர் மட்டும் எத்துணைப் பெரியதோ! ஸ்திரீகளுயிர் எத்துணைச் சிறியதோ!

பெண்டிழந்த புருடன் அவளிறந்த சில தினங்களுக்குள் வேறொரு நங்கையை மணந்து கூடிக் குலாவிக் களிக்கின்றனனே! அந்தோ மகளிர்மட்டும் அகமுடையான் இறந்த மேல், படும் அவத்தைகள் அறைதற்கும் பயமாயிருக்கின்றதே! புருடர் இறந்த மேல், பெண்களை மொட்டையடிப்பித்தும் சகல ஆபரணங்களையும் நீக்குவித்தும் ஒருவேளை புண்பித்தும் பலகால் துன்புறுத்துகின்றனரே! அவர் தம் சதியிழந்த மேல், ஆடவரும் ஏன் ஒருவித நிபந்தனையும் மேற்கொண்டாரில்லை? தமக்கொரு சட்டம் மகளிற்கொரு சட்டமா?

விலங்குகளை பொப்ப நேர்ந்த அளவிலாடவரோடு கலந்து திரிதரும் தாசி தாசரும் வேசி நேசருங்கூட விதவா விவாகம் என்றால் உமட்டுகின்றார்கள். கணக்கி விழிமக்கட்கு எச்சிற் பணிக்கமாம் தாசிகள் அதரத்தொழுகும் ஆரோசிக வெச்சிலை, தேவருக்கும் அமிழ்தோ என்றும், பற்பல ரோகிகள் பற்குறியிட்ட நாற்றவுதட்டை நறுங்கனியோ வென்றும், அடைகாயிட்டு அழுக்கின்சேர்க்கையால் பிணமென மணக்கும் பற்களைக்கண்டு முத்தோ முல்லையோ மருப்போ வென்றும், வஞ்சமனங்கொடு பொன்கொளவெண்ணிக் கொஞ்சும் வேசிகள் வஞ்சமொழிகளைக் கீதக்குயிலின் கின்னரக் கிள்ளையின் கீதமோ நாதமோ கீதாசாரமோ வென்றும், அலகிலாடவர் அடுத்தடுத்துச்சுவைத்த கபோலங் கண்டு கண்ணுடியென்றும் பற்பலர் சுவைத்த பாவிகள் கொங்கையை, குரும்பையோ, குன்றமோ, குன்றின் சிகரமோ வென்றும், இன்னோரன்ன கட்டுரை புனைந்து பித்தேறிப்பிதற்றும் பேதையர் தமக்கு ஓரே யாடவனை மணந்தணைந் திழந்த விதந்து ஏனோ மணவினைக்குதவாள்? மணமாதிருக்கப் பிணமாது தழுவிய மதியிலா மாந்தரை ஏனோ சாதிவிட்டு நீக்குகின்றாரில்லை?

இவர்கள் நீதியும் நாகரிகமும் இருந்தவாறென்னே! மாமியுடைத்தால் மட்கலம், மருகியுடைத்தால் பொற்கலமா?

பெண்டிழந்தானுக்கு மறுமணங்கண்டு மகிழ்கின்றனரே, நமது நாட்டினர். அதைப்பற்றிச் சிறிது கவனியுங்கள். 2, 3, 4-ம் தாரக் கணவர்களுக்கும், பெண்டிழந்தார்களுக்கும் பக்குவமடைந்தும் அடையாதுமிருக்கும் சிறுகன்னிகைகளை மணந்து மகிழ்கின்றனரே! இஃதென்ன மடமை! சிற்றின்பமே கண்டறியாத கன்னிகையின் மனமகிழ்விற்கும், சிற்றின்பத்தில் திளைத்திளைத்த பெண்டிழந்தானது மனவெழுச்சிக்கும் எத்துணை வேறுபாடு இருக்கும். பார்க்க, வேறுபட்ட மனநிகழ்வுடைய இருவர் நேசம் எத்தன்மையதாகும்? இன்னணம் உண்டாம் ஆர்வ பேதத்தினாலேயே மறுமணத்துப் பெண்களில் சிலர் தம் மொழுக்கத்தினின்றும் தவறுதற்கு ஏது உண்டாகின்றது.

இக்காலத்தில் கைம்பெண்ணோடு கலக்கும் காளையர் அறவே யொழிந்தனரா? திருட்டுத்தனமாய் சிசுக்களைக்கொடுத்து நடுத்தெருவில் தவிக்க விடும் பாவிகள் அழிந்து பட்டனரா? அல்லது சாதிக்குப் புறம்பாக்கப்பட்டனரா? அன்றித் தேசத்தைவிட்டு விலக்கப்பட்டனரா? "ஓதாதார்க்கில்லை யுணர்வொடு ஒழுக்கம்" என்ற மூதுரையின்படி கல்வி விலக்கத்தாலும் சுதந்தரப் பழக்கமின்மையாலும் களிமண் கட்டிகளாய் விளங்கும் கைம்பெண்களுக்கு தற்காப்பு என்னணம் உண்டாம்? படித்த புமான்களே தத்தமக்குத் தாரங்களிருக்கவும் கெட்டலையும்போது மணாளரற்ற மகளிர் என் செய்வர் பாவம்? இந்திரிய நிக்கிரகம் செய்த பெருந்தவசிகளு மொவ்வோர் காலத்துக் கண் தெரியாக்கபோதிகளெனத் தட்டுக்கெட்டுத் தடுமாறியிருக்க நம் தேயத்து "இளங் கைம்பெண்களெல்லாம் சிவ, சிவ, நாராயண நாராயண என்று சித்தாந்திகளாய், பிறகு வேதாந்திகளாய் சிவானந்த, நாரணானந்த பூதியடைந்து சுகமுறுவாராக" என்னும் மேதாவியர் அறிவென்னே! என்னே!!

புருடன் தக்க உத்தியோக முள்ளவனாகவேனும், திரவியவந்தனாகவேனும் இருந்துவிட்டால் அவனது வயது தேகவன்மை முதலிய யாதும் கவனியாது இரண்டாம், மூன்றாம், நான்காம், வேறெத்தனையாந் தாரமாகவேனும் தம் அருமந்தப் பெண்மணிகளை வலுவில் கொடுத்து மகிழ்கின்றனர் சில பெற்றோரும் மற்றோரும். 12-வயது பெண்ணுக்கு 50, 60 வயது காளையரைப் பிணைக்கின்றனர். சிலகாலத்தில் பாலப்பருவமுடைய மாதரார் விதந்துக்களாய்த் தெருவில் நின்று திண்டாடுகின்றனர்.

"கல்யாணம், காமவிச்சையை மிருகங்கள்போல் தணித்துக் கொள்வதற்காகச் செய்வதில்லை. புத்திரப்பேறொன்றனை மட்டும் நாடிப்

பலவிவாகங்கள் ஓராடவன் செய்துகொள்ள நேர்கின்றது" என்று கூறுவர் சில விவேகிகள். இவர் வயின் தோன்றும் எலிக்குட்டிகளும் நரிக்குட்டிகளும் தோன்றாது போய்விட்டால் அங்கோ நம் நாடு செழிப்பதெப்படி! உலகத்தில் யாவரும காமவிச்சையின்றித் தான் கள்ளத்தனமாய் குடிசை புகுந்து குடுமியறுபடுகின்றனர் போலும்! ஒவ்வோராடவனும் தன் மனைவிபால் செல்லும்போது புத்திரப் பேறொன்றனை மாத்திரந்தானே விரும்புகின்றான்! மனைவி கெர்ப்பிணியென வறிந்த பின்னர் மணுட்டிபால் செல்லாத மாந்தர் எத்துணையர் இருக்கின்றனர்?

என்ன ஐயா! பெண்மக்களைக் குறித்து என்னென்னவோ பேசுகின்றீர். ஔவையே "பேதைமை யென்பது மாதர்க்கணி கலம்" என்று தன்னினத்தவரைக் குறித்து இழித்துரைத்திருக்கின்றனளே! என்று சொல்ல வருவர் ஒரு சிலர். அவர் தமக்கும் சமாதானம் சொல்வது எனது கடனாகலான் தெரிந்தவரையில் சொல்லுகின்றேன்.

புராணேதிகாசங்களிலும் ஸ்திரீகளின் அரிய குணங்களை வர்ணிக்குமிடத்து பேதைமையையே முதற்கண் ஓதாநிற்கின்றேம். ஆனால் பேதைமை யென்னும் பண்புப் பெயர், ஸ்திரீகள் சம்பந்தமாய், இவர்கள் கொள்ளுமாறு அறியாமை என்னும் பொருள் தருவதன்று. மகளிர் தம் உயரிய குணங்களைக் கூறுமிடத்து முதற்கண் இழிந்த குணத்தைக் கூறுவரோ பெரியர்? ஆகவே பேதைமை யென்னும் சொல் இழிந்த உரைகோடாது உயரிய பொருளே உடைத்தாயிருக்கும். மாதர்தம் இழிந்த குணங்களைக் கூறுமிடத்து பேதைமை யொன்றென எந்தப் பெரியாரும் கூறினரில்லை. இன்னும் பேதைமை, மடமை என்று பொருள் தருவதாயிருந்தால் மகளிர் அடையத்தக்க குணங்களில் பேதைமையே சிலாக்கியம் என ஸ்திரீகளுக்கு பேதைமையை வற்புறுத்தி விதிப்பரா? அனுபவத்தினும் நூல்களின் வழியினும், நியாயவாராய்ச்சியினும் பெண்கள் மட்டித்தன்மையுடையவர் என்று ஏற்படாமைபால் பெண்களுக் கணிகலனுயுள்ள பேதைமை, பெண்மை என்று பொருள்படும்; அதாவது தெரிந்தும் தெரியாதுபோலிருத்தல். அறிந்தும் அறியாதுபோலிருத்தல் மூடத்தனமாமோ? அறிவுடையுலகீர்? ஆணவமற்ற அறிவாளிகளன்றோ அறிந்தும் அறியாதவர்போலிருப்பர்? ஓராசிரியன் தான் அவையடக்கங் கூறுங்கால் தன்னையிழித்துக் கூறிக்கொள்ளுதல் மரபு. அன்னணமவன் தன்னைக்குறைத்துப் பேசுவது கொண்டு அவன் மடையன், ஒன்றுமறியாதவனென்றும் தீர்மானிக்கலாமா?

பேதைமை என்பது இவர் கொள்ளுமாறு இழிந்த குணமெனவே வைத்துக்கொள்வோம், இந்தப் பேதைமைக் குணத்திற்கு ஆடவர்

அடிமையானதே இல்லை போலும், கோசிகர் மேனகைபால் சென்றதும் உருக்குமாங்கதன் பிரமபுத்திரியின் மனப்போக்கின்படி யெல்லாம் நடந்து குழந்தையையுங் கொல்லத் துணிந்ததும், இராமன் மாய மானைப் பின்றொடர்ந்ததும், இராவணன் உயிர் துறந்ததும், இந்திரன் ஆயிரங்கண் பெற்றதும், அர்ச்சுனன் தன்னுருக்காந்தும் பெண்கள் கண்வலையிற்பட்டு கரையேற வழியறியாது தியங்கியதும், வருணன் முதலாயினோர் நளனது வேடந்தரித்து தமயந்தியின் சுயம்வர மண்டபம் அடைந்து பின் வந்தவழியே திரும்பியோடினதும், எந்தப் பெருமித குணத்தின் காரியங்களோ? இத்துணை பெரியோர்க்கெல்லா மிருந்த பேதைமை யிவர்கள் ஞாபகத்திலில்லைபோலும்.

கடவுளும் சிருட்டியாதியைந்தொழில்களை அருளாஞ்சத்தியின் வழிநின்று நடத்த, அக்கிருத்தியங்களுக் கிலக்காய் அவற்றினுண்மையில் எட்டுணையுமுணராத மாந்தர், பெண்மக்கள் பேதையர் என்று புகல்வது தான் பேதைமையாகும். நம்வினை கழிந்து சொந்த வீடடைதற்குக் காரணமான அருளும் பெண்ணாக உவமிக்கப்பட்டிருக்கிறதே.

இவர் கூற்றை இன்னும் சற்று ஆராய்வோம். குழந்தை யென்னும் மின்சாரப் பொறியை யுண்டுபண்ணற்கெழுந்த இரண்டு சக்திகளே ஆடவரும் மகளிரும். ஆடவர் பாயும் சக்தி; மகளிர் ஈர்க்கும் சக்தி. அல்லது ஆடவா பாயுஞ்சக்தி யுண்டுபண்ணும் இயந்திரப் பாத்திரம்; மகளிர் ஈர்க்கும் அல்லது தாங்குஞ்சக்தி, யுண்டுபண்ணும் கருவிகளமைந்த பாத்திரம். இவர்வயின் தோன்றும் இரு சக்திகளும் ஒன்றுபட்டால் மதலையாம் மின்சாரப் பொரியுண்டாகின்றது. இச்சக்திகளில் ஒன்றேனும் தனித்த நிலையில் மின்சாரமாய மதலையை யுயிர்க்காது. ஆகவே ஒன்றையொன் றவாவிப் பொரியைத் தோற்றுவிக்கும். இவற்று ளெஃதுயர்ந்தது, எஃதிழிந்தது? தண்ணீர் எப்படி நல்லதாமோ, அஃதேபோல் தீயும் நல்லதேயாம். நீரில்லா விடத்தில் வெந்தீயினுக்கு மதிப்பில்லை. தீயில்லாத விடத்தில் தண்ணீருக்கும் பெருமையில்லை. ஆகவே இரண்டும் இன்றியமையாதன கண்டீர். ஒன்றை விட ஒன்று உயர்வென்பது யாவர்கூற்று? அஃதே போல் ஆண்மை பெண்மைகளில் ஏற்றத்தாழ்வுகள் கூறுதல் யாவர் கூற்றாம்? அர்த்த நாரீஸ்வரரது சரீரத்தில் பெண்பாகம் தாழ்ந்ததாயின் அவர் அதனை ஏனேன்றுக்கொண்டனரோ! ஏகதேசத்தில் ஒரு பெண் கெட்டால் எல்லாப்பெண்களும் கெட்டவரென்கின்றனர் நம் நாட்டில் கற்றாரும் மற்றாரும்.

இது நிற்க, இனிக் குழந்தைக் கல்யாணம் குட்டிக்கல்யாணங்களைப் பற்றிச் சிறிது கூறுவேன். மணத்தின் தர்மம் இன்னதென்றறியாத சிறுவர் சிறுமிகளுக்கு வதுவையாற்றிக் கண் பூத்து மகிழ்கின்றனர் தற்காலத் தாய்தந்தையர், காதல் மணமறியாத காதலர் தமக்குள்

மணமியற்றுவதால் இவர்களுக்கு என்ன நன்மையுண்டாமோ தெரிந்திலது. இவர்கள் நம் தேயத்தைப் பலிகொள்ளும் மாரி காளிகள் என்று சொல்லப்படும் அம்மை, விடபேதி முதலிய நோய்களுக்குத் தப்பிச் சதிபதிகளாக வாழும் பிராயமடைதல் கீழ்க்கடலிலிட்ட நுகத்துளையில் மேல்கடலில் வதிந்த ஓராமையின் தலைபுகுதலையொக்கும். ஒரு பிராயம் நிரம்பாத விதவைகள் முதல் பதினையாண்டு விதவைகள் வரையில் நமது சென்னை இராஜதானியில் மட்டும் பன்னூறுயிரமாய்ப் பெருகியிருக்கும்போது நமது நாட்டிற்கு வேறு குறையும் உண்டா? இந்தக் குழந்தைகளை யெல்லாம் விதவைகளாய்ப் பார்க்க விரும்பும் மேதாவியர் கருணையும் சீலமும் எத்தகையனவோ! எனவே, ஓராடவன் ஓரே மகளை வதுவையாற்றல் விவேகமென்பதும், புத்திரப் பேறு இல்லாதுபோயினும் பிறமாதரை மணந்திடல் அநாகரிகம் என்பதும் பெண்டிழந்தான் வதுவையாற்றநேரிடின் மணமியற்றிக் கோடற்கு சம்மதப்படும் இளம் விதந்துவை மணந்துகொள்ளலால் குற்றமில்லை யென்பதும், அன்னணமியற்றலால் நம் நாட்டில் வியபசாரம் குறைவுபடும் என்பதும், ஸ்திரீகளுக்கு உயர்தரக்கல்வி போதித்தும் அஃதில்லாதபோது கணவரே தம் நாயகிகளுக்கு நல்ல கல்வி கேள்விகளை யுண்டுபண்ணவேண்டுமென்பதும், பொம்மைக் கலியாணங்களால் அனர்த்தமேயல்லது நன்மை விளையாதென்பதும் அதனாலேயே பக்குவமடையாத விதந்துக்கள் நம் நாட்டில் மலிந்து கிடக்கின்றனரென்பதும், ஸ்திரீகளை மிகவும் தாழ்ந்த அடிமை நிலைமையில் வைத்து நடத்துதலழகன்று என்பதும் அறிவாளிகளின் அபிப்பிராயம். ஆனால் அவ்வபிப்பிராயத்திற்கு மாறாகத் தாம்வசிக்கும் பாழியோடு உலகம் முடிந்துவிட்டதென்று நினைத்திருக்கும் சில கூழை நரிகள் ஒன்றுசேர்ந்து இவை கூடாதென்று ஊளையிடுகின்றன. அவை யெப்போதும் ஊளையிட்டுக்கொண்டுதானிருக்கும். நம் தாய்நாடு முன் செல்லவேண்டிய விஷயத்தில் சிறிதும் பின் வாங்காது சென்றுகொண்டேதானிருக்கும்.

அத்தியாயம். 4

காலையில் சுமார் மூன்றுமணி இருக்கலாம். பள்ளி நீத்தெழுந்தாள் ஒருவிடலை. அரை நாழிகை நேரத்தில் வெளிப்போந்தான். அப்போழ்தத்து நாழிகை மணியோதையும், அடிக்கடிச் சுணங்கன்குரைப்பும், காவலர் கடுகி யேகுறுங் கலிப்பும், கூகையின் குமுறலும், யாமக்கோழி காட்டுங்குரலுமன்றி வேறோரோதையுங் கேட்கப்படவில்லை.

போந்தவன் தெற்கலங்க வீதியில் கீழ்த்திசை நோக்கிப் பல வினாடிகட்கொருமுறை திசையனைத்தையும் யாவனேனும் தன்னைத் தொடர்கின்றனனோ என்ற ஐயத்தைப் போக்குவான்போல் திருமித்திருமி தூயவானிடத்திகழ்ந்த உடுக்களுக்காயனாந் திங்களினுதவியால், பார்த்துக்கொண்டே நடந்தான். பிறகு வடக்கு முகமா யொரு வீதியிற் புகுந்தனன். பருதியுமிவனுக்குப் பின்னுறுமென்னப் பாய்ந்து விரவினன். ஒரு சந்தில் குடதிசைக்குறுகி மீண்டும் வடக்கு முகநோக்கினான். சில வினாடிகளுள் குன்றென உயர்ந்த ஒரு மதிற் புறத்தே வந்தெய்தினன். தனது கஞ்சுகத்தினுள்ளிருந்து நுனியில் மறு சுற்றும் அடியில் வழுவழுப்பும் அமைந்த சில இருப்பாணிகளை யெடுத்தனன். கைக்கோலின் கைப்பிடியைத் திருகினான். அதனுட்புறமோருளி போன்றிருந்தது. அதனாலவ்வாணிகளை சுவரில் சுமார் இருமுழத்திற் கொன்றாய், திருகிப் புகுத்தினான். தனக்கெட்டாதபோது கீழுள்ள ஆணிகளில் ஏறி நின்று மேலும் மேலும் ஆணிகளைப் பதித்து அவற்றின் மீதடிவைத்துச்சென்று மதிலின் மேற்சென்றான். உட்புறமிருந்து வளர்ந்தோங்கிய பாதபத்தின் கோடொன்று அம்மதிற் சுவரினாராய்ந்து நிற்க, அதில் அணிலே போன்று தொத்தினான். அடைந்தனன் பூமியை. ஒருபுறம் நோக்கிச்சென்றான். சென்றவளவில் சென்னெறி யொன்று தோன்றியது. அதனிருமருங்கினும் முல்லையாதிய மலர்ச்செடிகளும் கொடிகளும் நிறைந்துளவாயின. அவை பார்வைக்கு இன்பமான காக்ஷி தந்தன. அந்நெறிபற்றியே மேற்செல்லின் பதினாறுகால் மண்டபமொன்று பளிங்கினாலாயது. சம்பங்கியாதிய கொடிபடர்ந்துள்ளது, கண்கவர்வனப்பினதாயிருந்தது. அதினின்றுமோ ரிடைகழி புறப்பட்டு மாளிகை நோக்கிச் சென்றது, அதன்வழியே சிறிதுதூரம் சென்றதும் கவட்டை நெறிகள் பலவிருந்தன. அவற்றிலிந்நெறியே சென்னெறியாம் செந்நெறி யெனத்தேர்ந்து ஒன்றனைப்பற்றி நடந்தான். அவ்வழி கபாடத்தின் பக்கலில் இறுதியுற்றது. ஆங்கு இருவர் உறை நீத்த வாளினராய் உறங்கி உறங்கி விழித்தனர். "இதேதடா வம்பு செறிந்த வாயில் வந்தெய்தினோம" என்று தனக்குண்மொழிந்து அவ்வழியே பின்புறம் நோக்கிச் சென்றனன். சிறிது தூரத்தில் கீழ்த்திசை நோக்கி யோர் கிளைவழி சென்றது. அதனிடையே புக்கினன். சுவரின் அந்நெறி மாளிகையின் கடைச்சுவரின் கடையோடி நின்றது, அந்நெறியின் கடைக்கோடி சென்றவன் வேறு வழிகாணாது "ஏ! ஆலமர்தேவ! நின்னருளிருந்தவாறென்னே!" என்று சொல்லிக்கொண்டே ஆகாயத்தை நோக்கினன். பார்த்தவன் மனம் பரவசமடைய ஒரு சாளரத்தின் வழியே விளக்கொளி வெளியிருளைப்போழ்ந்து செல்லாநின்றது. சிறிதுபோது அசைவற்று நின்றனன். தன்மனத்தின்கண் யாதோ ஒருவகை சலனமுண்டாயது. அச்சலனத்தின் வயப்பட்டோனாய் அச்சுவரி

னுள்ளும் சில ஆணிகளை நுழைத்து அவற்றின் வழியே யூர்ந்து சென்று சாளரமணுகினன். சாளரத்தின் கதவங்கள் திறக்கப்பட்டிருப்பினும் உட்செல்லவொட்டாது இருப்புக்கம்பிகள் தடுத்துநின்றன. அவற்றிலொவ்வொன்றைப் பற்றியசைத்துப் பார்த்தனன். ஒவ்வொன்றும் தன் முன்கைப் பருமனுடையதாதலின் அவற்றையசைக்கவுமியலாதவனாய் உட்புறம் நோக்கினன். உடல் சற்று நடுக்குற்றது. "என்னசெய்தோம்! இக்காமப்பேய் நம்மை என்ன வெல்லாம் படுத்தாநின்றது! ஆங்குக்கண் துயிலும் ஆரணங்குவிழித்துச் சாளரத்தைப் பார்ப்பின் என்னாகும்! அவள் நம்மையாரெனமதிப்பாள்? கள்வன் வந்தானென்று கதறினல் நம் கதியென்ன! ஒருக்கால் நம்மை யறிந்துகொண்டு நம்மேல் அன்புகூர்ந்தாளாயினும்,

"குரவர் தாமியைந்து கொடுத்திலராயிற் குமரவேளனையவரேனும்
மருவாரிற்பர் தந்தைதாய் தங்களானையினொழுகுகன்னியர்தா
முருவிலரெனினுங்குரவருண்மகிழ்வுற்று வுதவுறினனையவர்தம்மைப்
பரவுவான் கடவுளாகவே நினைத்து பண்பொடும் பயிலுவரன்றோ."

என்ற ஆன்றோர் கூற்றின்படி அவள் தன் தாதையின் சத்துருவாகிய நம்மை எண்ணளவும் அருவருக்காமலிருப்பாள். ஆகையால் நாமிவணுற்றது அறிவீனமன்றே. நம் பெருங்குடிப்பிறப்பும், கல்வியும், அறிவும் ஒழுக்கமும் எங்குற்றனகொல்? "அச்சமும் நாணமும் அறிவகத்தில்லாக் கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி எச்சமற்றேமாந்திருக்கை நன்றே" என்ற ஆன்றோர் நன்மொழியை சிந்திக்குந்தனையும் இது காறும் நாம் என்ன மகிழ்வெய்தினேம்! இனியவ்வெழின் மொழியைப் பிறர்சொல என்னனங் கேட்போம்? சீ! நம் வாழ்க்கையும் ஒருவாழ்க்கையா? யாமெடுத்த விச்சடத்தை இன்றோடு விடுதலே சிறப்பு. நமது செயல் யாவருக்கும் தெரியாதென்றல்லவோ நினைத்தோம், யாவற்றினுள்ளும் எப்போழ்தத்தும் நிறைந்தொளிரும் இறைவனறியாததும் ஒன்றுண்டா! இதோ வீழ்ந்திறக்கின்றேன்" என மனத்தினுள்ளித் தன் வாணளில் வெறுப்புற்றவனாய் அவணிருந்தே கீழ் விழுந்திறக்கத் துணிந்தான். துணிந்த அதேகணத்தில் "எனது தேகத்தை எனது பெற்றோரின் சென்ம விரோதிகளின் புறக்கடையில் வீழச்செய்திறத்தல் என் குடிப்பிறப்பினைக்குறைத்திடுமன்றே. இது மானமுமுயிருமொருங்கு நில்லாத வழியுயிர் தன்னையே விடுத்துத்,

தானுறு பொருளாய் மானமேகொளுமென் தந்தைதன் செவிப்படிலென்னும், பானுவு மதியு மிலங்குறு மளவும் பழியிது வழி வழி வராதோ, ஆமெனவருந்தி யீனறது மிதற்கோ?"

என்றிவன்மனம் இருபாற்கவர்வுற்று இடையூசலாடி யொரு பாற்படாது நிற்கையில் உள்ளிருந்து ஒரு மென்குரல் இவன்றன் செவியிடைப்பட்டது. உட்புறம் நோக்கினன். "இவ்வினிய சத்தம்

இந்நங்கையினுடையதோ?" என வெண்ணிறைய் ஆங்குத்துயில்வாள் போன்றிருந்த பெண்மணியின் முகத்தையுற்று நோக்கினான். அவளும் சிலவினாடிகளுட் பெருமூச்செறிந்து "ஹே! சங்கரா! நின்னெழின்முகத்தைக் கண்டின்புறலென்றோ! தணிப்பரும்பகைமைகிணிந்த இவ்விருகுடும்பத்தும் பிறந்த நமக்குள்ளெழுந்த அளப்பருங்காதல் அவற்றினுக்கிறுசெய்திட வெழுந்ததோர்படையாமோ? அன்றிப்பகையைச்செகுக்கும் படையேயாமோ! அல்லது நம்மிருவர் கேட்டிற்கு நிலைக்களமாகுமோ! யான்மட்டுந் துன்புறல்வேண்டுமெனின் எட்டுணையுந்துணுக்குறேன். நின்பொருட்டு யான் துன்புறல் எனக்கு நேர்ந்ததோர் நினைப்பரும் நல்வினைப்பயனேயாகும். நின்பெருந்துன்பத்தினுக்கு நான் காரணமாயிருந்தேன் என்று உலகம் நவில ஒரு கணமுமுயிர் தரியேன்"..

அவள் சொன்னவனைத்துஞ் செவியுற்ற செம்மல் ஆஹா! இவளுக்கும் என்மாட்டு உள்ளன் பெழுந்ததென் நல்வினைப்பயனே. ஆடவனாகத்தோன்றியயான் அமயமுற்றும் இவட்குறுந்துன் பந்துடைத்தற்குக்கருதாது என் துன்பத்தினையே பெரிதென வெண்ணித்தற்கொலைசெய்து கோடற்குத் துணிந்ததொல்லுமோ! நன்றியறியாமகன் யானேஉலகில்! இவள் நிமித்தம் யானுயிர் வாழ்தல் இன்றியமையாததோ என இன்னவும் பலவுமுன்னி "இன்னும் பேசுதியென்றனிக் கண்ணே! கண்ணேயுயிரே! கௌரிகற்பகமே! கோற்றேனே நின்குயில் வாய்திறந்திடு. நின்னன்பு இத்தகையதென இதுவரையில் யானறியாதிருந்தேன். இனியான் உயிர்வாழ்தல் நின்பொருட்டாகும்" என்று சற்று உரத்த சத்தத்துடன் கூறினான் சங்கரன். இவ்வார்த்தைகள் தன் செவிப்படலும் உள்ளேபள்ளியில் பிரலாபித்துக்கொண்டிருந்த

கௌரி:—"ஈண்டென் அமைதியைக் கெடுக்கவந்துற்ற ஒற்றர்யாவரே. என்றந்தைமனையில், என்தனிமாடத்தும், இத்தகைய அசம்பவம் நேரிட்டதந்தோ!" என்று மொழிந்து, பின்னர் தனக்குள்தானே "இவர் யாவர்? என்னணம் இங்குவந்தார்? இங்கு எங்குகரந்துறைகின்றார்? என்னி ரகசியமனைத்தும் ஒருங்கே கவர்ந்தார்! என்று பல்லாற்றானுன்னிப் பின்னர் சற்று வெடித்தகுரலில் "ஹோ! சங்கர! நின்செயலிருந்தவாறு!"

எனப்பெருமூச்செறிந்து எழுந்து அவ்வறையினுளோர் புறத்தே இலங்கியவாளொன்றனை வலக்கரத்தினிற் கொண்டு "என் சொந்த இரகசியங்களைக் கரந்து கவர்ந்தவரை இன்னே முடிப்பேன்" என்று தன்னறையைச் சுற்றிச் சுற்றிப்பார்த்து ஒருவரையுங்காணாதவளாய்த் தியங்கலானாள். அவ்வேளை,

(தொடரும்)

காரைக்கால், அ. நாராயணன்

தமிழ் நாட்டுத்தலைவர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுகாருவால் அடி கோலப்பட்டது	நவசக்தி ஆசிரியர் ஸ்ரீ திரு வி. கலியாணசுந்தர முதலியாரால் திறக்கப்பட்டது.	சிதம்பரம் தேசபக்தர் ஸ்ரீ என். தண்டபாணி பிள்ளை அவர்களால் நிறுவப்பட்டது.

"என் தண்டபாணி கம்பெனி"

"தமிழ்நாடு" கட்டிடத்தில் புது புத்தகசாலை

இந்த கம்பெனியில் முக்கியமாய் இராஜீய, தேசீய, மத சம்பந்தமுள்ள தமிழ், இங்கிலீஷ் ஹிந்து புத்தகங்களும், நவீனநாவல்களும், (ஸ்கூல், காலேஜ்) பள்ளிக்கூட சில்லரைப் புத்தகங்கள் பலவும், இதர சாமான்களில் முக்கியமானவைகளும் விற்கப்படும்.

பத்திரிகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்டிருக்கும் புத்தகங்கள், மருந்துகள், கதர் துணிகள், இதர சாமான்கள் முதலியனவற்றுள், நம்பிக்கையுள்ளதாயும், நல்லதாயும், உள்ளவற்றை வாங்கி அதே விலைக்கு நமது கம்பெனி மூலம் விற்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

போலி கம்பெனிகளுக்கு பணம் அனுப்பி ஏமாந்துபோகாமல் இருப்பதற்கென்றே இக்கம்பெனியை ஸ்தாபித்திருப்பதால், சந்தாதாரர்கட்கும் அவர் நண்பர்கட்கும், பத்திரிகாபிமானிகளுக்கும் தேவையுள்ள இதர எல்லா சாமான்களையும் நமது கம்பெனியில் இல்லாவிடினும் நேரில் நல்லதாய்ப் பார்த்து வாங்கி அனுப்பவும், கம்பெனிக்குச் சம்பந்தமில்லாத விபரங்களை விசாரித்து எழுதவும், வெளியூரிலிருந்து கடல் மூலமாகவோ, தரை மூலமாகவோ, சென்னைக்கு வரும் நண்பர்கள் (முன்னறிக்கை கொடுத்தால்) இருக்க இடவசதி முதலானவைகளை ஏற்படுத்தியும், டிக்கெட்டுகள் பெற்றும் பினாங்கு, சிங்கப்பூர் மலாய் நாடுகள், இரங்கூன் (பர்மா) கொழும்பு(சிலோன்) முதலிய வெளிநாட்டு வியாபாரிகளின் சரக்குகளை கப்பல் மூலம் ஏற்றுமதி இறக்குமதி. செய்யவும் இன்னும் துறைமுக இதர அலுவல்கள் பூராவுஞ் சொற்ப இலாபத்தில் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

மத சார்பான புத்தகங்கள்.

ஆறுமுக நாவலர் பிரசுரங்கள், விவேகாநந்தர் புத்தகங்கள், ஆச்சாரியார்களின் பாஷியங்கள், 18 புராணங்கள், இதிகாசமாகிய இராமாயண, பாரதங்கள், தேவாரம், திருவாசகம் முதலிய திருமறைகள், இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா, தாயுமானவர், பட்டினத்தார் பாடல்கள், சங்க இலக்கியங்கள், விநோத கதைகள், புதிய நாவல்கள், மகம்மதியர்களுக்கு வேண்டிய புத்தகங்கள் முதலிய எல்லா விதமான புஸ்தகங்களும் நம்மிடம் கிடைக்கும். விலை நயமாயும் பதிப்பு சுத்தமாயும் இருக்கும்.

உள் நாட்டிற்கு (இந்தியா, பர்மா, சிலோன்) புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும். இதரசாமான்களுக்கு 100-க்கு 25 வீதம் முன்பணம் அனுப்பினால் பாக்கி வி. பி. மூலம் அனுப்பப்படும்.

வெளிநாட்டு நண்பர்கள் (வி. பி. முறையில்லாமையால்) புத்தகங்கள் இதர சாமான்கள் எல்லாவற்றிற்கும் தயவுசெய்து முன்பணமாக முழுதும் அனுப்புதல் வேண்டும். கடிதம், மணியார்டர், ரிஜிஸ்டர், இன்ஷியூரன்ஸ், பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் முதலியவை கீழ்கண்ட விலாசப்படி அனுப்பப்படவேண்டும்.

என். தண்டபாணி கம்பெனி, தபால்பெட்டி 292, மதராஸ்.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

சகல பட்டு, தினுசுகளும் கிடைக்கும்.

விலை ஜாப்தா இனும்.

நயம் கஸ்தூரி நம்பர் 1	தோலா	ரூ. 75
,, 2	தோலா	ரூ. 45
,, 3	,,	ரூ. 35
குங்குமப்பூ தோலா 1-க்கு		ரூ. 3½ முதல் 5 ரூ வரை.
கோரோசனை தோலா 1-க்கு		ரூ 12
நயம் பால் காயம் 10-தோலா டப்பி 1-க்கு		ரூ. 1
கம்பளிப் போர்வை 6×3 முழம் நம்பர் 1		ரூ. 12
,, ,, ,, 2		ரூ. 9

விலை ஜாபிதாக்களுக்கு உடனே எழுதவும்

விலாசம்:—மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

Manager, Silk Pitamber Co, BENARES CITY,

எல்லோருக்கும் முக்கியமாய் வேண்டியது.

ஸ்திரி புருஷ ரகஸ்யம்

அல்லது

இன்பரஸ சாஸ்திரம்.

குறைந்த விலை! பொருத்த விஷயம்!!

ஸ்திரி புருஷர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு விஷயமும் மிக உயர்ந்தது. இந்தப்புஸ்தகம் ஒன்றைப் படிப்பதனால் ஆண்களும் பெண்களும் அநேக விஷயம் தெரிந்துகொள்ளலாம். சொற்ப காப்பிகளே இருக்கின்றன. ஆர்டருக்கு முந்துங்கள்.

விலை தபால்கூலி உள்பட ரூ. 1—7—0.

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிதேசங்களுக்கு முன் பணம் அனுப்பிப்பெறவேண்டும்.

108 சிவலிங்கப்படங்கள் (இரண்டு கலர்) அணா 12.

3 படங்கள் ரூ. 2.

இங்கிலீஸ் ஸ்விஸ் வாட்ச் டிரேடிங் கம்பெனி,

தபால்பெட்டி, 285, மதராஸ்.

"தமிழர்" நன்மைக்காக உழைப்பது "திராவிடன்" ஒன்றே. மிகவும் குறைந்த மாதசந்தா ரூபா ஒன்றே. ஆகவே, உடனே இன்றே "திராவிடனுக்கு" எழுதி வரவழைத்து வாசித்து மகிழுங்கள்.

குழந்தைகள் வயிற்றுக்கட்டியை க்ஷாரத்துவயம் கண்டிப்பாய்க் கரைக்கும் வாரமலும் தடுக்கும்.

விலை ரூ. 5 வி. பி. தனி.

திலக பார்மஸ்கியூடிகல் ஒர்க்ஸ், பவானி.

(ஈரோடு மார்க்கம்)

Vasudeva Vilasam Vydya Sala,

Fort, TRIVANDRAM.

All sorts of Ayurvedic Medicines

Can be had at cheap rates. Our Medicines are best in preparation. Patronised by Director and inspector of Ayurveda, Travancore.

எல்லா நோய்களுக்கும் ஆயுர்வேத விதிப்படி மிகநேர்த்தியான பாகம் செய்யப்பட்ட எல்லா ஔடதங்களும் எப்பொழுதும் விற்பனைக்குக் கிடைக்கும்

சுகம்மர க்ருதம்.

கர்ப்பத்தை இரட்சைப்படுத்தி நற் சந்தானத்தை யளித்து பிரசவ கால வருத்தத்தை நீக்கி இன்னும் அநேகம் நன்மையை அளிக்கும். இந்தக்ருதம் (நெய்) கர்ப்பமாயிருக்கும் காலத்தில் ஒவ்வொரு பெண்மணியும் கட்டாயம் உபயோகிக்கவேண்டியது.

(3) மூனறு அவுன்சு பாட்டில் விலை, ரூ. 1—0—0

பஞ்சலவண செந்தூரம் சேர்ந்த

ஜாவ்ஸமன் அவர்களின்

ரிங்குவாம் லோஷன்

உபயோகிப்பதினால் எல்லாவித படை, மேககாரகபடை, எச்சில் தழும்பு இன்னும் அநேக விதமான தோல் சம்பந்தமான வியாதிகளையும் 24 மணி நேரத்திற்குள் குணப்படுத்தும்.

புட்டி 1க்கு விலை அணா 8.

ஜாவ்ஸமன் அவர்களின்

ரோமசங்காரி தைலம்.

இந்த தைலத்தை தேகத்தில் அனாவஸ்யமாயிருக்கும் ரோமங்களை எடுக்க உபயோகிக்கலாம். கஷ்டமில்லாமல் 5 நிமிஷத்தில் எடுக்கக்கூடியது. புட்டி 1-க்கு விலை அணா 0—8—0.

Amaravathi Agency, Park Town, MADRAS T.

கணபதி பண்டசாலை, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.

½ பவுன், 1 பவுன், 2 பவுன் எடையுள்ள தகர திருகு மூடியுள்ள தமான சாடிகள் 1-க்கு	0 6 0 / 0 8 0 / 0 10 0
4 பவுன் சாடிகள்	1 2 0
வாஷிங்டன் லைட்டு சிம்னிகள், வெள்ளை.	2 8 0
ஷை பச்சை	3 0 0
ஜெர்மன் மேக்கர், தகர திருகு மூடியுள்ள கண்ணாடி இங்கிபுட்டிகள் 1-க்கு	0 3 0

ஆபீசுக்கு உதவக்கூடிய சகல சாமான்கள்.

ப்வுண்டன் பேனுக்கள்:—

வாட்டர்மன் பேனு	7 8 0
சுவான் ,,	6 0 0
பிளாக்பர்டு ,,	3 4 0
ஷை மாட்டல் (பலவர்ணம்)	3 8 0
ஷை தானே இங்கி இழுக்கக்கூடியது	5 8 0
செப்டியூன் வெள்ளிமூடி யுள்ளது	5 0 0

1-ரூபாமுதல் 12-ரூபா விலையுள்ள 30-வகை பவுண்டன் பேனுக்கள் எம்மிடம் விற்கப்படும் வேண்டியவர்கள் விலைபட்டியலுக்கு எழுதுங்கள்.

இது தருணம்! இது சமயம்!!

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.
மதுரைத் தமிழ்ச் சங்கம்.
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.
உயர்திரு. வாலையானந்த சுவாமிகள், பஞ்சாட்சரபுரம்.
உயர்திரு. சுவாமி வேதாசலம் அவர்கள் (பல்லாவரம்)
திரு. பா. வே. மாணிக்கம் நாயக்கர் அவர்கள் பி. இ., எம். சி. ஐ., (சூப்பிரண்டெண்டிங் இஞ்சினீர்)
திரு. இராவ்பகதூர் கே. எஸ். சீனிவாசம் பிள்ளை யவர்கள்,
மகாமகோபத்தியாய திரு. உ. வே. சுவாமிநாதய்யர் அவர்கள்.
திரு. கே. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், எம். ஏ., எம். எல்.
திரு. தி. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள், சென்னை,
திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
திரு. மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை அவர்கள் பி. ஏ. எல். டி.

ஆகிய இவர்களாலும், மற்றத் தமிழ் அறிஞர்களாலும் எழுதப்பெற்ற சைவம், வைஷ்ணவம், தமிழ் இலக்கியம், இலக்கணம், நாடகம், நாவல் முதலிய எல்லாவிதமான நூல்களும், படங்களும், எம்மிடம் கிடைக்கும்.

விலாசம்:— கணபதி பண்டசாலை,
25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

வ.

சென்ற குரோதன, கார்த்திகை "தமிழர்" இதழில் வெளிவந்த வினாவிற்கு அதில் காட்டிய விதிகளுக்குட்பட்டு தக்கபடி எழுதிய பேர்களை குலுக்கிப்போட்ட சீட்டுகளில் முதன்மையாக வந்தவருடைய பெயரும் விலாசமும்:—

1 வது—பரிசில் பெற்றவருடைய பெயரும் விலாசமும்:—

திரு. **R.** சேஷண்ணுசாரியார்,
போர்டு மிடில் பாடசாலை,
இராசிபுரம், சேலம் ஜில்லா.

கார்த்திகை மாதத்தில் தோன்றிய வினாவிற்கு சரியான விடை பின் வருமாறு:—

	கா	ங்	தி			பா	ர்	வ	தி
ப	சி		ரு	க்	ம	ணி		து	ரு
ஞ்		ப்	தி			கை	வை		ச்
ச	கு	ளி		மா	தா		கை	கே	சி
ர	தி		த	மி	ழ	ர்		சி	ரா
த்		பூ		ச	ம்		உ		ப்
தி	யா	கி		ம்	பு		சா	மி	ப
ன	கை		த			கு		பு	ள்
ம்			ச	ஞ்	சி	கை			ளி

குறிப்பு:—விடையுடன் ஒரு அணு தபால் தலை அனுப்பாதவர்களுடைய விடை கவனிக்கப்படமாட்டாது.

இனாம்! ஒரு பவுன்!! இனாம்!!!

இதன் கீழ் குறிப்பிட்டிருக்கும் விடுகதை சதுரத்தை எவராவது அடுத்த பக்கத்திலுள்ள விதிகளை சரியானபடி கவனித்து நிறைவு செய்து ஒரு அணு தபால் தலையுடன் எமக்கு அனுப்புவார்களாகில், அந்த விதமாகப்பெற்ற சரியான விடைகளுக்குள்ள பெயரைக் குறிப்பிட்டுள்ள சீட்டுகளைக் குலுக்கிப்போட்டு முதலில் எடுக்கும் பேருள்ள விலாசத்திற்கு நமது "தமிழர்" ஒரு ஆண்டுப் பத்திரிகைகளை இலவசமாக அனுப்புவோம். ஒரு ஆண்டு இறுதியில் இந்த 12 பெயருள்ள சீட்டுகளைக் குலுக்கிப்போட்டு முதலில் எடுத்த பேருக்கு ஒரு பவுன் இனாமாக அளிக்கப்பெறும்.

விடை இந்த சதுரத்திலேயே எழுதி இந்த பக்கத்தை கத்தரித்து அமைச்சர், "தமிழர் நிலையம்", 25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.



ஐயா, தாங்கள் கூறும் முடிபே கடைசி முடிபு என்றும், சட்டப்படி செல்லக்கூடிய தென்றும் ஒப்புக்கொள்ளுகிறோம்.

கையெழுத்து..

முழு பெயர்..

முழு விலாசம்..

163

விதிகள்.

ஒவ்வொரு வெள்ளை சதுரத்திற்கும் ஒரு எழுத்து போடவேண்டும். கணக்கிட்ட சதுரங்களிலிருந்து சொற்கள் ஆரம்பிக்கும். இடமிருந்து வலமாவது, மேலிருந்து கீழாவது சென்று பூக்களிட்டச் சதுரத்தில் சொற்கள் முடிவுபெறும். இந்த விதிகளைச் சிறிதும் தவறாமல் கவனித்து எழுதியனுப்பாத விடைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

முன்பக்கம் குறிப்பிட்டிருக்கும் இடத்திலேயே விடையும் விலாசமும் எழுதியனுப்பவேண்டும். வேறு காகிதத்தில் எழுதினுல் ஒப்புக்கோள்ள முடியாது. குரோதன, மாசி **17**-ம் தேதிக்குள் ஒரு அணு தபால் தலையுடன் எமக்குக் கிடைக்கப்பெறுகிற விடைகளை மட்டும்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இது சம்மந்தமாக வரும் யாதொரு கடிதப் போக்கிற்கும் பதிலளிக்க முடியாது. ஒருமுறை பரிசு பெற்றவர்கள் அந்த ஆண்டிலே மறுபடியும் கலக்கக்கூடாது.

தமிழ் குறுக்கு வார்த்தை சதுரம்விடுகதைவினு குறிப்புகள்:--

இடமிருந்து வலம்.

1 சைவ திருமந்திரம்
4 பொன்னம்பலம்
7 மாசி மாதத்திலோர் விசேஷ நாள்
8 குருடன்
9 உருக்கம்
10 வித்தைக்காரன்
11 சிதம்பரத்திலெழுந்தருளியிருக்கும் சிவசக்தியின் பெயர்
14 பதினெண் புராணத் தொன்று
17 ஓராண்டு
18 கடுவிரதம் பூண்ட பாரதத்தின் பாத்திரத்திலொருவள்
20 காவிரி தோன்றும் மலை
22 ஓர் பறை
24 விருந்தன்
25 கொலை
26 கம்மாளர்
27 விநாயகர்

மேலிருந்து கீழ்.

1 நரகத்திலுள்ளவன்
2 ஓர் யோகம்
3 தென்திசைக்கோன்
4 உக்கிரசேனன் மகன்
5 ஆண் மயில்
6 புத்திமாராட்டம்
12 ஓர் கைவளை
13 தருமநூல்
14 கணவன் சகோதரி
15 அடிக்க
16 இலட்சுமி, பாக்கியம் (நடு)
17 பகடிப்பாட்டு
19 இரணியாட்சன் இரணியகசிபன் ஆகிய இவர்களின் ஆதிவம்சப் பெயர்
20 மூத்தோர்
21 சமுசாரி
23 உண்மைதேசிய சத்தியாக்கிரகர்
24 பிசாசம்

கணபதி பண்டசாலை, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி,

விளம்பர விவரம்.

கடையிலுள்ள சாமான்கள் தாமாகவே விலையாகா!

“விளம்பரம் செய்யாமற்போனால் எவ்வளவு நல்ல சரக்காக விருந்தபோதிலும் வியாபாரம் ஆகாது” என்று பெரிய ஆங்கில வியாபாரிகள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். விளம்பரம் செய்யக் கூடியது மாதச் சஞ்சிகையில்தான். ஏனென்றால் மாதச்சஞ்சிகைகளை மாதம் முழுவதும் படிப்பதுமல்லாமல் ஒரு ஆண்டு கடைசியில் 12 இதழ்களும் பெற்ற பிறகேதான் ஒரு புத்தகமாகப் பயிண்டு செய்து எப்போதும் புத்தகசாலையில்வைத்து வாசிக்கக்கூடியது. மற்றவை அப்படியல்ல. ஆகவே, “தமிழர்” மாதச் சஞ்சிகையில் உங்கள் விளம்பரஞ் செய்யுங்கள். “தமிழர்” சஞ்சிகை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், வெளிநாடுகளிலுமுள்ள பெருத்த வியாபாரிகள் முதல் சிறிய வியாபாரிகளையும் நாடிச் செல்லுகிறது. இது வியாபாரத்தின் முன்னேற்றத்தை நாடி வெளிவருகிறது.

2. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய முன்னேற்றத்தையும் நாடிவருவதால் இந்தச் சஞ்சிகையைப்பெற்று மகிழ்ச்சியடையாதார் ஒருவருமே யிருக்கமாட்டார்கள்.

3. இந்த சஞ்சிகையில் விளம்பரம்செய்து அடையக்கூடிய பயனையும் விளம்பரம் செய்வதால் ஏற்படும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், செலவு ஒன்றுமேயில்லையென்று எண்ணலாம். இதைவிடக் குறைந்த சார்ஜுக்கு தமிழ்நாட்டிலுள்ள இதுபோன்ற எந்த சஞ்சிகையும் ஏற்றுக்கொள்ளாது.

4. அடுத்த தை இதழ் இதைவிட அதிக விஷயங்களைக் கொண்டு 10,000 பேருக்குச் செல்லுவதால் காலந் தாழ்க்காது உடனே உங்கள் விளம்பரத்தை அமைச்சர், “தமிழர்” தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதுக.

கண்டிராக்டு ஒப்பந்தம் விகிதம்:—

ஒரு வருடத்திற்கு மொத்தமாக அட்வான்சு தொகை கொடுப்பவர்களுக்கு 100க்கு $12\frac{1}{2}$ வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்பெறும்.

ஆறு மாதத்திற்கு மொத்தமாகக் கொடுப்பவர்களுக்கு 100க்கு $6\frac{1}{4}$ வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்பெறும்.

மூன்று மாதத்திற்குக் குறையாமல் கொடுத்தால் $3\frac{1}{8}\%$ தள்ளிக் கொடுக்கப்பெறும்.

ஒரு முழுப்பக்கத்திற்கு 15-0-0, அரைப்பக்கம் 8-0-0, கால்பக்கம் 5-0-0, துண்டுத் துணுக்கு விளம்பரங்கள் :-ஒரு வார்த்தைக்கு 0-2-0 (இது 24 வார்த்தைகளுக்கு மேற்படல் ஆகாது.)

5. ரூபாய்க்குக் குறைந்த விளம்பரப் பகுதிகளுக்குக் கமிஷன் கிடையாது. அமைச்சர், “தமிழர்” நிலையம், தெப்பக்குளம் திருச்சி.